www.padippakam.com


# செஞ்சக்தி

செய்திப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

1998 ஆகஸ்ட் அலரி 04 மலர் 01 நன்கொடை 07 ரூபாய் மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்


## நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதற்காக

# பொதுவேட்பாளர்

## ம.வி.மு. அரசியல் கட்சிகளுக்கு தெரிவிப்பு

**1998 ஆகஸ்ட் மாதம் நடத்தப்படவிருந்த மாகாணசபைத் தேர்தலை தள்ளிப்போட்டிருக்கும் பொதுசன முன்னணி அரசாங்கம் கூடிய விரைவில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு உத்தேசிப்பதாக தெரியவருவதால். அந்த ஜனாதிபதி தேர்தலின் போது நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதற்காக இணக்கமுள்ள எல்லாக்கட்சிகளும் ஒன்றிணைந்து கட்சி சார்பற்ற பொது வேட்பாளர் ஒருவரை நியமிப்போம் எனக்கேட்டு மக்கள் விடுதலை முன்னணி கடந்த சில தினங்களுக்கு முன்பாக சகல அரசியல் கட்சிகளுக்கு எழுத்துமூலமாக தெரிவித்திருக்கிறது.**

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் தோழர் டில்வின் சில்வா அவர்களின் கையொப்பமிடப்பட்ட, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை எதிர்ப்போர் எனக் கருதப்படும் சகல அரசியல் கட்சிகளுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் முழு விபரம்

1998 ஆகஸ்ட் மாதம் நடத்தப்பட வேண்டிய மாகாணசபைத்தேர்தலை அவசரகால சட்டத்தின் கீழ் காலவரையின்றி தள்ளிப்போட்ட பொதுசன முன்னணி அரசாங்கம் 1998 வருட இறுதியிலோ அல்லது 1999ம் ஆண்டு முதல் பகுதியிலோ அவசரமாக ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்காக உத்தேசித்துக்கொண்டிருப்பதாக பேசப்படுகிறது.

நாட்டின் ஜனநாயகத்துக்கு இருக்கின்ற பிரதான தடை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை தான் என்று கூறி அதை 1995 யூலை 15ம் திகதி இல்லாதொழிப்போம் என்று வாக்குறுதியளித்த பொதுசன முன்னணியின் தலைவி வாக்குறுதியை மீறியிருப்பது மாத்திரமல்ல, நிறைவேற்றுஅதிகார ஜனாதிபதி முறையை இல்லா தொழிப்பதற்கு பதிலாக உரிய காலத்துக்கு முன்பே மீண்டும் ஒரு ஜனாதிபதி தேர்தலொன்றை நடத்துவதற்கு தயாராவது நாட்டின் ஜனநாயகம் தொடர்பாக கேள்வி மிகவும் பாரதூரமாக காரணியாகுமென நாம் கருதுகின்றோம். எனவே, இனிமேல் பொதுசன முன்னணி நிறைவேற்று ஜனாதிபதி முறை இல்லாதொழிக்க முன்வராதது என்பது இப்போது நன்றாக தெளிவாகிவிட்டது,

இவ்வாறான நிலைமையின் போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை எதிர்க்கும் அதை அகற்றுவதற்காக நேர்மையான தேவையுள்ள அனைத்து அரசியல் கட்சிகள் அமைப்புக்கள், முற்போக்கு சக்திகள் அனைத்தும் ஒரே குறிக்கோளிலிருந்து செயல்படவேண்டிய தேவை என்றுமில்லாதவாறு முன்வந்துள்ளது.

அவ்வாறான ஜனாதிபதி தேர்தலின் போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதை நோக்கமாக கொண்ட நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு எதிராக எல்லா அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் ஏற்றுக்கொள்கூடிய ஓர் கட்சிசாரா பொது வேட்பாளர்

7ம் பக்கம் பார்க்க...

## இடது சாரிகளின் கூட்டறிக்கை!

ஐக்கிய நடவடிக்கையில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் மக்கள் விடுதலை முன்னணி, நவசமமாஜக்கட்சி, ஐக்கிய சோஷலிச கட்சி, திய்ச ஆய்வு வட்டம் போன்ற கட்சிகளும் இயக்கமும் தாம் ஐக்கிய நடவடிக்கையில் சேர்ந்து செயல்படுவதன் அடிப்படை நோக்கதை தெளிவுபடுத்தி கூட்டறிக்கை ஒன்றை இலங்கை வாழ் மக்களுக்கு சமர்பிக்க தயாரித்துள்ளனர்.

ஐக்கிய நடவடிக்கையில் குறைந்தளவு அதிகபட்ச குறிக்கோள்களும், அந்த ஐக்கிய நடவடிக்கையை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான வரலாற்றுத் தேவை தொடர்பாகவும் இந்த கூட்டறிக்கையில் அடங்கியிருப்பதாக கூறப்படுகிறது.

கடந்த 13ம் திகதி இந்த கூட்டு அறிக்கைகளை பொதுசன ஊடகங்கள் அனைத்துக்கும் வழங்கியுள்ளதோடு, அதை எதிர்வரும் நாட்களில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் அச்சிட்டு இடதுசாரி செயல்பாடுமிக்க சக்திகள் மத்தியில் பகிர்ந்தலிக்கப்படுமென இடதுசாரி தலைவர்கள் முடிவு செய்துள்ளனர்.

இதேவேளை, கடந்த 14ம் திகதி 'புதிய ஜனநாயக கட்சி'யும், மக்கள் விடுதலை முன்னணிக்கிடையே, ஐக்கிய நடவடிக்கைகள் தொடர்பாக இருசாராரும் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், அப்பேச்சுவார்த்தை பெருமளவில் வெற்றியாக நிறைவுபெற்றதாக மக்கள் விடுதலை முன்னணி கூறுகின்றது. எதிர்காலத்தில், "உடன்படக்கூடிய சில நடவடிக்கைகளில் மாத்திரம் இணைந்து செயல்படவும், இருகட்சிகளுக்கிடையே நடைபெறும் பேச்சுவார்த்தையை தொடர்ந்தும் முன்னோக்கி கொண்டு செல்வதற்கு, இப்பேச்சுவார்த்தையின் போது இரு கட்சிகளும் இணங்கியுள்ளதாக" தெரியவருகிறது.

## ஹேமாவும் களத்தில் குதிக்கிறார்!

ஐக்கிய தேசிய கட்சி தலைமைத்துவத்துக்கு எதிராக வேறு ஓர் அரசியல் கட்சியை உருவாக்கவும், அதன்மூலம் வரப்போகும் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கும்,ஐ.தே.க வின் பிரேமதாசவாதிகள் சகல நடவடிக்கைகளையும் செய்துவருவதாக தெரியவருகிறது.ஐ.தே.க வின் முன்னால் தொழில் அமைச்சரொருவரான எச்.ஆர். பியசிரியின் தலைமைத்துவத்தின் கீழ் உருவாக்கப்பட்டிருக்கும் அக்கட்சியின் (ஐக்கிய மக்கள் கட்சி)உண்மையான தலைவர்களாக செயல்படப்போவது ஹேமா பிரேமதாச அல்லது சிரிசேனகுரேயாகுமென

7ம் பக்கம் பார்க்க.....

## இடது சாரிகளின் எதிர்ப்பு 20 ல்

யுத்தத்தை காரணம் காட்டி தேர்தலை தள்ளிப்போட்டதற்கும், அவசரகால சட்டத்தை அமுல்படுத்தியதற்கும் எதிராக மக்களை தெளிவுபடுத்தும் இயக்கத்தையும், ஆர்பாட்ட இயக்கத்தையும், கொழும்பு கோட்டையில் இம்மாதம் 20திகதி பி.ப.5 மணிக்கு ஆரம்பிப்பதற்கு, இப்போது ஐக்கிய நடவடிக்கையில் இணைந்திருக்கும் இடதுசாரி கட்சிகளின்கூட்டுமுடிவு செய்திருக்கிறது. அதன்படி மக்கள் விடுதலை முன்னணி, நவசம சமாஜக் கட்சி, ஐக்கிய சோஷலிச கட்சி, தியச ஆய்வு வட்டம், போன்ற அமைப்பின் தலைவர்கள் உட்பட, மேலும் பல வெகுஜன தொழிற்சங்கங்களும் இதில் கலந்துகொள்ளவிருக்கின்றன..

பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணாயக்கார தலைமையில் இயங்கும், ஜனநாயக பொதுசன இயக்கம், ஜீவல வேலையிழந்தோர் கூட்டமைப்பு, லேக்ஹவுஸ் ஊழியர் சங்கம், அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், உட்பட பல வெகுஜன அமைப்புக்கள் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிய வருகிறது.

## பாடசாலை மலசல கூட குழியில் எலும்பு கூடு!

யாழ்ப்பாணம் வாசவிளான் பாடசாலையில் மலசல கூட குழியிலிருந்து மனித எலும்புக்கூடுகள் எடுத்து குவிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. இத்தகவல் வெளிவருவது, இதுநாள் வரை அப்பாடசாலை ராணுவ முகாமாக பாவிக்கப்பட்டு அண்மையில் பாதுகாப்பு படை அதிலிருந்து வெளியேறிய பிறகு, பாடசாலையை புதுபிக்க ஆரம்பித்த பிறகே இந்த எலும்புகூடுகள் தோன்றியுள்ளன. இந்த மலசலகூட குழியிலுள் இருந்து எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளின் ஒரு எலும்புக்கூட்டை அடையாளம் காணப்பட்டிருக்கிறது.

இடைக்கு கட்டப்படும் பச்சை நிற பட்டியும் விரலில் மோதிரம் ஒன்றும் குறிப்பிட்ட எலும்புக்கூட்டில் இருந்ததினால், அப்பிரதேசத்தில் வசிக்கும் இந்திராணி ராஜசிங்கம் எனபவரால் தமது கணவரின் உடலின் எலும்புகூடுதான் அதுவென இனம் கண்டுள்ளார். வேலன் ரத்னசிங்கம் என்ற இவர் 1995.09.12 ம் திகதியே காணாமல் போயுள்ளார். புலிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என முன்பு நினைத்திருந்த போதிலும், அவரை கொண்டு சென்று கொன்றிருப்பது ராணுவம் என்பது இப்போது உறுதியாகியுள்ளதென இந்திராணி ராஜசிங்கம் அவர்கள் கூறியுள்ளார். இன்னும் பல மனித எலும்புக் கூடுகள் அந்த மலசல கூட குழியில் இருப்பதாக, அதை புதுப்பிக்க சென்ற ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

## தேர்தலை பின்போட்டமைக்கு திராக இடதுசாரிகள் இணைந்து நடத்திய மறியல் போராட்டம்




மக்கள் விடுதலை முன்னணி, நவசமசமாஜ கட்சி, ஐக்கிய சோஷலிச கட்சி, இன்னும் பல வெகுஜன அமைப்புகள் சேர்ந்து யுத்தத்தை காரணம் காட்டி தேர்தலை பின்போடுவதற்கெதிராக கடந்த மாதம் 23ம் திகதி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முன்னால் பெரும் திரளான மக்கள் ஒத்துழைப்போடு கூட்டு ஆர்பாட்ட இயக்கத்தை நடத்தினர். இந்த மறியல் போராட்டத்தின் போது, யுத்தத்தை காரணம் காட்டி தேர்தலை பின்போடாதே!. இன்னுமோர் ஜனாதிபதி தேர்தல் வேண்டாம்!. இனவாதிகளின் யுத்தத்தை நிறுத்து! போன்ற சுலோகங்களை கோஷித்து வெற்றிகரமாக முடிவுற்ற போது இறுதியாக 'இடதுசாரி சக்திகள் வாழ்க!' என்று கூடியிருந்த பெரும் திரளான மக்கள் விண்ணதிர கோஷித்தனர். அதன் ஒரு பகுதியையே மேலே படத்தில் காண்கிறீர்கள்."இடதுசாரிகளின் வெற்றி உறுதியானது...நிலையானது..."

## தொலைபேசியை "டெப்" செய்யும் புதிய யந்திரம் கொண்டுவரப்பட்டுள்ளது,!

அரசாங்கத்தில் கெபினட் அமைச்சர்கள், எதிர்கட்சி அரசியல் வாதிகள் ஒரு சில பொதுசன ஊடக வியலாளர்கள், முக்கிய நபர்களின் தொலைபேசியை 'டெப்' (ஒற்றுகேட்கும்) செய்யக்கூடிய நவீன இயந்திரம் ஒன்றை இறக்குமதி செய்யப்பட்ள்ளது.

பிரான்ஸ்'எல்கடெல்' நிறுவனத்திலிருந்து கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த நவின இயந்திரம் ஒரே தடவையில் 1000 தொலைபேசிகளை 'டெப்' செயட்யக் கூடியது. இதற்கு முன்பு பயன்படுத்திய இயந்திரத்துக்கு இவ்வளவு தொலைபேசிகளை உள்வாங்கிக் கொள்ள முடியாது. அதேபோல், பழய இயந்திரம் குறிப்பிட்ட நபர்களின் குரலை பதிவு செய்யாது. ஆனால் இந்த புதிய இயந்திரம் 24 மணி நேரமும் இயங்குகின்ற அதேவேளை, சகல தொலைபேசி உரையாடல்களையும், குறிப்பிட்ட நபர்களின் சொந்த குரலை பதிவு செய்யக் கூடியதாகும். உள்ளேயும் வெளியிலும்பாரிய நெருக்கடிக்குள்ளாகும் ஒரு அரசாங்கத்துக்கு இதுபோன்ற இயந்திரங்களின் தேவை இயற்கையான ஒன்றென இது தொடர்பாக கருத்து வெளியிட்ட ஓர் பத்திரிகையாளர் 'செஞ்சக்தி'க்கு தெரிவித்தார்.

படிப்பகம்

www.padippakam.com



# ஒற்றுமையை நோக்கி ஓர் அடி முன்னால்!






## ஜபபான, ஒற்றுமைமக்க இடதுசாரி இயக்கத்தின் மாநாட்டின் அனுபவங்கள்...

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கம்யூனிஸ் பிரகடனத்துக்கு 150 வருடங்கள் பூர்த்தியானதை முன்னிட்டு ஜப்பானிய பாட்டாளிவர்க்கம் கடந்த யூன் மாதம் 21ம் திகதி சக்தி மிக்க அடி யொன்றை முன் வைத்தது. மாக்ஸிஸத்தின் முதலாவது வையோபாய கம்யூனிஸ் பிரகடத்திற்கு 150 வருடங்கள் பூர்த்தியானதை முன்னிட்டு ஜப்பான் டோக்கியோ நகர 'ஷோஸோ' So Sho மண்டபத்தில் இந்த முக்கியத்துவம்வாய்ந்த மகாநாடு நடைபெற்றது. கணிசமான அளவு மக்கள் கலந்துக் கொண்ட இந்த மகாநாடு 1970 தஸாப்தத்துக்குப்பிறகு ஜப்பானிய இடதுசாரி அமைப்பின் மூலம் நடத்தப்பட்ட மிகமுக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதலாம். இந்த மாநாடு நடத்தப்பட்டதன் நோக்கம் 70 தசாபத்தில் பிளவு பட்டுப்பிரிந்திருந்த ஜப்பானிய இடதுசாரி அரசியல் பிரிவுகளை மீண்டும் ஒன்றிணைப்பதேயாகும். சித்தாந்த ரீதியிலோ அல்லது கருத்து முரண்பாடு காரணமாகவோ ஜப்பானிய இடதுசாரி அரசியல் அமைப்புக்களின் பிளவு அதிகரிக்கப்பட்டிருக்கவில்லை. நடைமுறைகளும், வேறு முக்கியத்துவம் வாய்ந்த சிறு விடயங்களுமே இந்தப் பிளவுக்குக் காரணம். இந்த நிலையைக் கவனத்திலெடுத்து பிரிந்து தனியாக செயல்படுவதை விடுத்து, தமக்கிடையேயுள்ள சிறு சிறு வேறுபாடுகளை களைத்துவிட்டு, எல்லோருக்குமான ஒரே அமைப்பைக் கட்டியெழுப்புவதற்காக உடனடியாக பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்க வேண்டுமென்ற கருத்து, 1996 நவம்பர் மாதம் ஜப்பானில் நடைபெற்ற கார்த்திகை வீரர்கள் நினைவுதின நிகழ்ச்சியில் கலந்து கொள்ள ஜப்பானுக்குச் சென்ற J.V.P யின் தலைவர் சோமவங்ச அமரசிங்க தோழரினால் ஜப்பானிய இடதுசாரி அமைப்புக்களுக்கு உணர்த்தப்பட்டது. அன்றிலிருந்து கடந்த இருவருடங்களாக, பல மட்டங்களில் ஜப்பானிய இடதுசாரி அமைப்புக்களினால் பேசப்பட்டது. ஆரம்பத்தில் மந்தமாக செயல்பட்ட அமைப்புக்களை புனரமைப்பதற்கான செயல்கள் பின்னர் மிக உத்வேகத்தோடு நடந்தன. பத்திரிகையொன்றை மாத்திரம் வெளியிட்டு வந்த அமைப்புக்கள் தீவிரமாகச் செயல்படவும் அப்போது தான் ஆரம்பித்தன. எப்படியிருப்பினும் சர்வதேச கம்யூனிஸத்தின் பெரிய தியாகத்தோடு விருத்தியடைந்த இந்த அம்மாம் 21ம் திகதி நடந்த மாநாட்டின் மூலம் மேலும் சிறப்படைந்ததும். சர்வதேச கம்யூனிஸ லீக், தொழிலாளர் அமைப்பு, கம்யூனிஸ்ட் கட்சியை கட்டியெழுப்புவதற்கான சம்மேளனம் (CECO), ஒகினோவா அமெரிக்க ராணுவ எதிர்ப்பு மக்கள் முன்னணி, பிலிப்பின் புரட்சிவாத தொழிலாளர் கட்சி (RPP), மக்கள் விடுதலை முன்னணி உட்பட பல்கலைக்கழக பேராசியர்கள் பலரும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். அந்த தோழர் அமரசிங்க பிரதான பேச்சாளராகக் கலந்து கொண்டார். (தோழர் சோமவங்ச அமரசிங்க ஆற்றிய உரை 3ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.)

இந்த மாநாட்டில் (CECOP) அமைப்பின் சார்பில் பேசிய அதன் காரியதரிசி சகோதரி AITKUTA, JVP தலைவர் கூறியது போல் நாம் உட்பட எல்லா அமைப்புக்களதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயங்கள் 90%யும் ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்கள் 10% யும் பற்றி பேசிப் பேசியே அதிகமான காலங்களை வீணடித்து விட்டதையும், தமது அமைப்பு அதைப் பற்றி சுய விமர்சனம் செய்வதாகவும் சொன்னார். அதேபோல், மாக்ஸ்லெனின் வாத சர்வதேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப முயற்சித்துக் கொண்டு, அதற்காக பாரிய போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் JVP உட்பட எல்லா அமைப்புக்களோடும் நிபந்தனையின்றி கைகோர்த்துக் கொள்ளப் போவதாகவும் கூறினார்.

ஒகினோவா அமெரிக்கா ராணுவ எதிர்ப்பு மக்கள் முன்னணியின் தலைவர் தோழர் SHOWICH CHIBANA பேசும் போது, தமது வாழ்நாளின் தான் திருப்தியடையும் நாள் இந்த மாநாடு நடக்கும் நாள் தான் என்றும் இந்நாளை இன்னுமொரு ஞாபகார்த்தத்துக்குள் மட்டுப்படுத்தாது, மாக்ஸ் லெனின் வாத சர்வதேசத்தை மீண்டும் கட்டியெழுப்புவது வரை முன் செல்ல வேண்டுமென்றும், அதற்காகத் தமது அமைப்பு எவ்வித தியாகத்தையும் செய்யத் தயாராயுள்ளதென்றும் குறிப்பிட்டார். ஜப்பானிய இடதுசாரி அமைப்பின் [illegible] இடமில்லை. அதேபோல் லெனின் வாத சர்வதேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய தேவை, இன்றைய உலக ரீதியாக ஏற்பட்டிருக்கும் உற்சாகம் போன்றவற்றை உயர்த்திய ஒரு சந்தர்ப்பமாக இதனை நாம் குறிப்பிட முடியும்.

## உலகச் செய்திகள்...

### இந்துனேசியாவில் ஊர்வலம் செல்லத் தடை!

ஊர்வலங்களையும் ஆர்ப்பாட்ட இயக்கங்களையும் நடத்துவதை தடுக்கும் புதிய சட்டமூலம் கொண்டுவருவதற்கு இந்தோனேசிய அரசாங்கம் தயாராகிக்கொண்டிருக்கின்றது. இச்சட்டமூலம் நடைமுறைக்கு வந்த பிறகு எந்தவிதமாலன அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு இந்தோனேசிய மக்களுக்கு முடியாதென 'அன்தரா' என்ற அரசாங்க செய்தி சேவை மூலம் செய்தி அமைச்சர் 'யூனுஸ் யூஸ்னியா' அறிவித்துள்ளார்.

இந்தோனேசியாவில் நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடி, முன்னாள் ஜனாதிபதி சுஹார்ட்டோவை அகற்றிய பின்பு சீராகுமென்று மக்களுக்குக் கூறி ஆர்ப்பாட்டங்களை நிறுத்துவதற்கு அந்நாட்டு முதலாளித்துவ வர்க்கம் (அமெரிக்காவுடன் சேர்ந்து) எதிர்பார்த்திருந்தபோதும் இப்போது அந்த எதிர்பார்ப்புகள் அனைத்தும் கண் முன்னே உடைந்து சிதறிப் போயுள்ளது. 'சர்வதேச நாணய நிதியம்' உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு முன்வந்தபோதும் அவர்களின் நிபந்தனையின் முன்னால் நெருக்கடி மேலும் உக்கிரமடைவது தவிர்க்க முடியாதென அவதானிகள் கூறுகின்றனர்.

எப்படியாயினும் 1998 ம் ஆண்டு முடிவடையும்போது அந்நாட்டு 20 கோடி மக்களில் 10 கோடி மக்கள் பாரிய நெருக்கடிமிக்க வறிய நிலைமைகளினால் பட்டியலில் சாகவுள்ளனர். இதனால் மீண்டும் எழக்கூடிய மக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைத் தவிர்ப்பதற்காக இந்தோனேசிய தற்போதைய ஜனாதிபதியின் அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் இவ்வாறான சட்ட மூலத்தினால் தடுக்க முடியாது. கிழக்காசியாவில் ஏனைய நாடுகளிலும் பொருளாதார நெருக்கடி உக்கிரமடைவதால் மேலும் மக்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் உக்கிரமடைவது என்றும் தவிர்க்க முடியாது.

### ஐரோப்பா முழுவதும் வேலை நிறுத்த போராட்ட அலை!

9000க்கும் அதிகமான பிரித்தனிய புகையிரத தொழிலாளர்கள் கடந்த மாதம் 4 நாள் வேலை நிறுத்தம் ஒன்றை ஆரம்பித்தனர். R.M.T என்ற தொழிற்சங்க தலைமையில் புகையிரத வீதி சமிஞ்ஞை (signal) பிரிவில் உள்ள தொழிளாளரின் ஆரம்பத்திருக்கும் வேலைநிறுத்த கோரிக்கைகள் சில.

தொழிலை நிரந்தரமாக்குதல், சம்பளத்தை உயர்த்துவதுபோலவே சகல தொழிற்சாலைகளிலும் உள்ள தொழிலாளர்களுக்கும் சம சம்பளம் என்ற பிரதான கோரிக்கைகளாகும்.. வேலை நிறுத்தினால் பிரதானமாக தனியார் மயப்படுத்தப்பட்ட புகையிரத தொழிற்துறைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுவதாக தெரியவருகிறது. இவ்வேலைநிறுத்த போராட்டத்தினால் லண்டனில் ஓடும் புகைவண்டிகள் 2-3 மணித்தியாலம் தாமதம் ஏற்படுவதாகவும் தாமதம் ஏற்படும் ஒவ்வொரு புகைவண்டிகளிலும் ஒரு நொடிக்கு 60 பவுண் நஷ்டம் ஏற்படுவதாக தெரியவருகிறது.

## மொன்காடா தாக்குதலின் 45 வருட நினைவு!



கியூபா புரட்சிக்கு ஆரம்ப அடிக்கல்லிட்ட 1953 ஜூலை 26 ம் திகதிய மொன்காடா தாக்குதலுக்கு 45 வருட பூர்த்தியை முன்னிட்டு ஹவானா நகரில் நினைவுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொடர்ந்து 5 மணி நேரமாகப் பேசிய கியூபா நாட்டின் புரட்சித் தலைவர் தோழர் பிடல் கஸ்ட்ரோ, கியூபாவுக்கு எதிராக அமெரிக்க ஐக்கிய நாடு கொண்டு செல்லும் கீழ்த்தரமான நடவடிக்கைகளை அம்பலப்படுத்தினார். 1960ம் ஆண்டு முதல் தனக்கு எதிராகத் தொடுக்க தாக்குதலைச் சம்பவக் கோவையாக கூட்டத்தில் முன்வைத்த தோழர் கஸ்ட்ரோ அவைகளைச் செயற்படுத்தியமைக்காகவும், அவைகளைத் தடுத்து நிறுத்துவதற்குத் தவறிய குறிப்பிட்ட காலங்களில் வொஷிங்டன் ஆட்சி தலைமைத்துவத்திலிருந்தோர் அக்குற்றங்களுக்குப் பொறுப்பேற்கவேண்டும்.

ஆனால் அக்குற்றங்கள் தொடர்பாக நான் தற்போதைய அமெரிக்க ஜனாதிபதிக்குக் குற்றம் சுமத்தவில்லையென்றும், அவருக்கு எனது சோஷலிசத்தின் நட்புக் கரத்தை நீட்டுவதாகவும் கூறினார்.

மேலும் 'Economics 98' எனும் இடத்திலிருந்து லக்கின் ஆசிய பொருளாதார வல்லுனர்களுக்காக ஆற்றிய உரையில் தோழர் கஸ்ட்ரோ, உலகிலுள்ள சமுதாயங்களில் சோஷலிச பொருளாதார முறையே உயர்வானதென்றும், அதை நாம் அடிதளமாக [illegible] வெற்றிகொண்டோமென்றும் என்று கூறிய கஸ்ட்ரோ தொடர்ந்து பேசியபோது, இப்போது உலகில் தொடர்ந்து நிலவிவரும் முதலாளித்துவ முறையில் ஒருபோதும் தீர்க்க முடியாத நெருக்கடிகள் உக்கிரமடைந்திருப்பதால், அவ்வாறான பொருளாதார நெருக்கடியின் ஊடாக இலகுவாக சோஷலிசத்தை நோக்கி செல்ல முடியுமென்றும், அதற்காக ஆயுத போராட்ட வழி தேவையில்லை என்றும் அவர் கூறினார்.

படிப்பகம்

www.padippakam.com





# வலதுசாரி சந்தர்பவாதத்தை போலவே தீவிர இடதுசாரி சந்தர்ப்பவாதத்துக்கும் எதிராக..

**உலகம் பூராகவும் வாழும் மாக்ஸியவாதிகளின் கையேடான கம்யூனிய பிரகடனத்தின் 150 வருடப்பூர்த்தியை முன்னிட்டு, தனித்தனியாகச் செயல்பட்ட இடதுசாரி அமைப்புக்கள் பல ஒன்றிணைந்து ஜூன் 21ம் திகதி ஜப்பானிய டோக்கியோ நகர SO SHO மண்டபத்தில் ஜப்பானிய பாட்டாளி வர்க்கச் அமைப்புக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த மாநாடொன்று நடைபெற்றது. அதில் விசேட பிரமுகராக அழைக்கப்பட்டிருந்தவா; JVP யின் தலைவர் தோழர் சோமவங்ச அமரசிங்கவாகும் அந்தமகாநாட்டில் அவர் ஆற்றிய உரை இங்கு பிரசுரமாகிறது.**

தலைமை தாங்கிக் கொண்டிருக்கும் தோழர்களே, அன்புக்குரிய சகோதர சகோதரிகளே,

மனிதவர்க்கம் கடந்து வந்த எல்லா யுகங்களைப்போலவே, கடக்கப் போகும் நிகழ்கால, வருங்கால யுகங்களிலும் சமமான மதிப்பு வாய்ந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நூலுக்கு 1998ம் வருடம் 150 வருடங்கள் பூர்த்தியாகின்றன. சர்வதேச கம்யூனிஸ அமைப்பு கம்யூனிஸப் பிரகடனத்தை 1848ல் வெளியிட்டதன் மூல் ஒரடி முன்வைத்துள்ளது. 150 வருடவரலாற்றை 15நிமிடங்களுக்குள் சொல்லி முடித்துவிட வேண்டுமென்று எனக்கு பணிக்கப்பட்டிருக்கிறது. அதாவது 10 வருட வரலாற்றை 1நிமிடத்துக்குள் சொல்லிமுடித்துவிட வேண்டும். இந்த வருடத்தில் இந்த நாள் அதாவது 1988 ஜூன் 21ம் திகதி ஜப்பானிய கம்யூனிஸ அமைப்பு ஓரடியை முன்னால் எடுத்துவைக்கத் தயாராவுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் இலங்கை மக்கள் சார்பாகவும், (ஜே.வி.பி) மக்கள் விடுதலை முன்னணி சார்பாகவும் உங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கம்யூனிஸப் பிரகடனம் 'சர்வதேசபாட்டாளி வர்க்கமே ஒன்றுபடு' என்ற அதி உயர் கோஷத்தோடு ஆரம்பிக்கிறது. இந்தக் கோஷம் சத்தம் போட்டுச் சொல்வதற்காக மட்டும் நமக்குக் கிடைக்கவில்லை இங்கே பெயரில் எழுதித் தொங்க விட்டிருப்பது போல் எழுதித் தொங்கவிடுவதற்கு மட்டுமல்ல, சொல்வதற்கும் எழுதுவதற்கும் மாத்திரம் இதனைப் பயன்படுத்தினால் அது பிரயோஜனமற்ற கோஷமாகிவிடும் வெறும் வார்த்தைகளாக மாறிவிடும். கட்டாயமாகச் செய்ய வேண்டிய ஒன்றையே இந்தக் கோஷம் சொல்கிறது. அதேபோல் செய்யக்கூடிய ஒன்று.

மனிதன் படைத்த தலைசிறந்த சிந்தனையாளர்களான, சக்திவாய்ந்த போராட்டக் குணம் கொண்ட புரட்சிவாதிகளான கார்ல் மாக்ஸ், பிரெட்ரிக் ஏங்கல்ஸ் என்ற எமது ஆசிரியர்கள் இருவரும், சகல தேசத்தையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தினரே, ஒன்று சேருங்கள் என்ற இந்த வாக்கியத்துக்குள் இந்தச் சிறிய கோஷத்துக்குள், இதுவரை எழுதப்பட்ட லட்சக்கணக்கான புத்தகங்களிலும் இன்றும் நாளையும் எழுதப்படப் போகும் கோடிக்கணக்கான புத்தகங்களிலும் எழுதி முடிக்கமுடியாத பாரிய வேலைத்திட்டமொன்றை, செயலொன்றை கருக்கியுள்ளனர். ஆகவே, இந்தக் கோலும் வெறும் கோஷம் மாத்திரமல்ல ஒருவேலைதிட்டம், ஒரு செயல் முறை.

சர்வதேச கம்யூனிஸ அமைப்பு தொடங்கிய நாளிலிருந்து இன்றுவரை கார்ல் மார்க்ஸ் பிரெட்ரிக் ஏங்கல்ஸ் முதல் உலகில் தோன்றிய எல்லா சர்வதேசவாதிகள் செய்ததும் இன்று செய்து கொண்டிருப்பதும் என்னவென்றால் இந்தக்கோஷத்தை வெற்றிபெறச் செய்வதற்காக முயற்சிசெய்வதேயாகும். ஒரு பக்கத்தில் பார்க்கும் போது சர்வதேச கம்யூனிஸ அமைப்பின் வரலாறு என்பது உலகபாட்டாளிவர்க்கத்தை ஒன்று சேர்க்க முயற்சிக்கப்பட்ட வரலாறும் மறு பக்கத்தில் சர்வதேச கம்யூனிஸ அமைப்பு என்பது ஒற்றுமையின் எழுச்சியும் வீழ்ச்சியும் கொண்டவரலாறு. இந்த ஒற்றுமை கட்டியெழுப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய கம்யூனிஸ அமைப்புக்கள் எழுச்சி பெற்றன. இந்த ஒற்றுமை வீழ்ச்சியுற்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய கம்யூனிஸ அமைப்பு பின்தள்ளப்பட்டன. இதனால் சர்வதேச கம்யூனிஸ அமைப்பும் பின்தள்ளப்பட்டது, வீழ்ச்சியடைந்தது, தடம்புரண்டதும், சந்தர்ப்பவாதத்துக்குப் பலியானது. உலகம் பூராகவும் இருந்த கம்யூனிஸ வாதிகள் தோல்விக்கு முகம் கொடுத்தனர். லட்சக்கணக்கான புரட்சிவாதிகள் உயிராலும், இரத்தத்தாலும், வியர்வையாலும் விலை கொடுத்தனர். இது சம்பந்தமான கவலைத்தைத் திரும்ப நாம் வற்புறுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

உலகம் பூராகவும் பரவியுள்ள முறைக்கு எதிராக நாம் போராடுகிறோம் 'சுய உற்பத்தியில் பொருட்களுக்கு வேதனமாக பாரிய அளவிலான சந்தையொன்றைத் தேடுவதற்காக உலகம் பூராகவும் ஓடவேண்டிய நிலை முதலாளித்துவ வர்க்கத்துக்கு ஏற்படும். எல்லா இடங்களிலும் குடியேறுவதற்கும், தொடர்புகள் வைத்துக்கொள்ளவும் நேரிடும் என்று கம்யூனிஸப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்று கார்ல் மார்க்ஸ் ஏங்கல்ஸ கூறிய வசனம் அப்படியே இன்று பொருந்துகிறது. முதலாளித்துவத்தோடு முடிச்சு போடப்படாத ஒருவரோ ஒரு இடமோ இன்று இன்று இருக்கிறதா? இல்லை, விசேடமாக இந்த இன்டநெட் யுகத்தில் முழு உலகமும் ஒரு சிறு கிராமமாக மாறியுள்ளது. இது நல்லதோர் அம்சம். அதாவது முதலாளித்துவம் தனது புதைகுழியைத் தானே தோன்றிக் கொள்கிறது என்று கம்யூனிஸப் பிரகடனம் கூறுகிறது. அது உண்மை முதலாளித்துவ முறையால் உருவாக்கப்பட்ட இன்ட நெட்டை எடுத்துக் கொள்ளுங்கள். பெரிய லாபம் சம்பாதிக்கத்தான் முதலாளித்துவத்துக்கு இன்டர்நெட் தேவைப்பட்டது. அப்படியிருந்தும் பாட்டாளிவர்க்கத்தினாகிய எமக்கும் இன்டர் நெட் மிகவும் பிரயோஜனமாயிருக்கிறது. இப்போது ஜப்பானிய பட்டாளிவர்க்க அமைப்பு இன்டநெட் மூலமாக இலங்கை பாட்டாளிவர்க்க அமைப்பைச் சந்திக்கிறது. இலங்கையில் நடைபெறும் விடயங்களை நிமிடத்துக்குள் ஜப்பானுக்குத் தெரிகிறது. ஜப்பானில் நடைபெறும் விடயங்கள் நிமிடத்தில் இலங்கை தெரிந்துகொள்கிறது. கருத்துப்பரிமாற்றம் நடக்கிறது எனவே, பாட்டாளி வர்க்க அமைப்பொன்றை உருவாக்க நாம் மேற்கொள்ளும் முயற்சியை முழு உலகுக்கும் காட்ட சாதனமொன்று நமக்குக் கிடைத்துள்ளது. சர்வதேச அமைப்பொன்று தான் இப்போதைய தேவை. ஆகவே இந்த குறையை நாம் பூர்த்தி செய்ய வேண்டும்.

அடுத்ததாக, கம்யூனிஸப் பிரகடனம் இப்படிச் சொல்கிறது, உலகச் சந்தையை முதலாளித்துவ வர்க்கம் சுரண்டுவதன் மூலம், எல்லா நாடுகளிலும் உற்பத்திக்கும், நுகர்தலுக்கும் தேசியமற்ற தொடர்பொன்றைக் கொடுத்துள்ளது. இந்த நிலையில் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள பாட்டாளிகள், அந்த ந்த நாடுகளின் தேசிய மட்டத்தில் முதலாளித்துவத்திற்கெதிராகப் போராடவேண்டும் சர்வதேச ரீதியிலும் போராட்டத்தை இணைக்க வேண்டுமென்று நாம் சொல்வது அதனால் தான் இணைப்பதற்கான மத்திய நிலையமொன்று தேவை.

தோழர் லெனினுடைய மரணத்துக்குப்பிறகு கம்யூனிஸ அமைப்பு ஒரு சில வெற்றிகளைப் பெறுவதை நாம் கண்டோம். அவற்றில் அநேகமானவற்றை திருப்பிவிட ஏகாதிபத்தியவாதிகளால் முடியுமாயிந்தது. சுருக்கமாகச் சொன்னால் சர்வதேச கம்யூனிஸ அமைப்பு உலகரீதியில் பின் தங்கிவிட்டது. சர்வதேச கம்யூனிஸ அமைப்பு வலது சாரி சந்தர்ப்பவாதத்துக்கும், அதேபோல் இடதுசாரி சந்தர்ப்பவாதத்துக்கும் பலியாகியதே அதற்கான காரணம். சர்வதேச கம்யூனிஸ அமைப்பில் சிலர் முதலாளித்துவ ஆட்சியாளர்களோடு கூட்டாளிகளுக்குச் சென்றனர். ஏனையோர் தீவிர இடதுசாரி தடம்புரள்களுக்குள் மூழ்கிக் கொண்டனர்.

சர்வதேச கம்யூனிஸ அமைப்பின் பலவீனத்தால் இத்தாலியின் டஹோ ஷோவைப் போன்று, ஜேர்மனியின் சிகப்பு ராணுவத்தைப் போன்று, ஜப்பானிய சிகப்பு ராணுவத்தைப்போன்ற (செம்படை) அமைப்புக்கள் உருவாகின. அவற்றின் பயங்கரவாத நடவடிக்கைகள் சர்வதேச கம்யூனிஸ அமைப்புக்கு உலகம் பூராகவும் கலக்கத்தை ஏற்படுத்தின. தற்போது மத அடிப்படைவசதிகளுக்கு ஒரு சில நாடுகளில் தலைதூக்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்த எல்லா அமைப்புக்களும் ஏகாதிபத்திய வாதிகளுக்கு லாபமளிக்கக்கூடிய நிலையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன.

பட்டினியையும், தொழிலின்மையையும், போஷாக்கின்மையையும் உரிமையாக்கி, ஏகாதிபத்தியத்தின் இருப்பை உறுதி செய்துள்ளது. தற்போது, முதலாளித்துவத்தினாலும், ஏகாதிபத்தியத்தினாலும் உலகம்பூராகவுமுள்ள மக்களின் பிரச்சினைகளைத்தீர்க்க முடியாதென்பது நிருபணமாகியுள்ளது. வேகமாக முன்சென்ற தென்கொரியப் பொருளாதாரம் உடைந்துவிட்டது. தாய்லாந்து மலேசியா மாத்திரமல்ல, இந்துனீஸியாவின் பொருளாதாரமும் சிதைந்து விட்டது. 32 வருடங்கள் ஆட்சியிலிருந்த சுகார்த்தோ வீடு செல்ல நேரிட்டது. உலகத்தின் பெரிய பொருளாதார நாடான ஜப்பானும் இன்று இக்கட்டான நிலைகடகுக் தள்ளப்பட்டுள்ளது. இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ் மகா பிரிட்டன் போன்ற முன்னேறிய நாடுகளிலும் மில்லியன் கணக்காக வேலையற்றவர்கள் தோன்றியுள்ளனர். சமூகப்பிரச்சனைகள் உக்கிரமடைந்துள்ளன. இலங்கையைப் போன்றே ஆசியா ஆபிரிக்கா லத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளின் நிலையும் கவலைக்கிடமாயுள்ளது. எனவே உலகம் பூராகவுமுள்ள மக்களின் பிரச்சனைகளை உக்கிரமடையச் செய்யும் சமூக அமைப்பு முறையை மேலும் வைத்திருப்பதில் எவ்விதப் பிரயோசனமுமில்லை என்பதை முன்னேற்றமடைந்த நாடுகளின் தலைவர்கள் நினைக்க வேண்டும். தலைவர்களால் நினைக்க முடியாததால் அவைகளை உலகம் பூராகமுள்ள மக்கள் நினைக்கத் தொடங்கியுள்ளார்கள். அந்த மக்களுக்கு மேலும் மேலும் விளக்கத்தைப் பெற்றுக் கொடுப்பது எமது கடைமையாகும். அது எமது பொறுப்பு. அதனால், கம்யூனிஸப் பிரகடனத்துக்கு150 வருடங்கள் பூர்த்தியாகும். இச்சந்தர்ப்பத்தில் உலக மத்திய நிலையமொன்றை அமைக்கும் பாரிய முயற்சியின் ஈடுபட எண்ணியுள்ளோம் உலகத்திலுள்ள உண்மையான கம்யூனிஸ வாதிகளை இலங்கைக்கு வரவழைத்து இந்த மத்திய நிலையத்தை அமைக்கும் பூர்வாங்க நடவடிக்கையில் இறங்க நாம் உத்தேசித்துள்ளோம்.

நாம் ஜப்பானுக்கு வந்து உங்களைச் சந்திக்கும் இந்த நாள் ஜப்பானிய பாட்டாளிவர்க்க அமைப்புக்கு முக்கியமான நாள் என்பதில் சந்தேகமில்லை. JVP யினராகிய நாம் பிரிந்து பிளவுண்டிருந்த ஜப்பானிய பாட்டாளி வர்க்கத்தின் நேர்மையான பிரிவுகளோடு தொடர்ந்து பேச்சுக்கள் நடத்தினோம். இப்படி பிளவுபட்டு பிரிந்திருப்பதில் என்ன லாபம் என்பதை ஆழமாகச் சிந்திக்கும்படி நாம் கேட்டுக் கொண்டோம். அந்த வேண்டுகோளுக்கு முக்கியத்துவமளித்து, ஜப்பானியச் சகோதரர்கள் இந்தமாநாட்டை பலம் பெறச் செய்துள்ளனர். இவ்வளவு காலமும் நீங்கள் சந்தித்துப்பேசியது விவாதித்தது ஏற்றுக்கொள்ளக் கூடியவைகளைப் பற்றியல்ல ஏற்றுக்கொள்ள முடியாதவை எவையெவை என்பதைப்பற்றியே நீங்கள் தேடிப்பார்த்தீர்கள். ஆனால், நாம் இச்சந்தர்ப்பத்தில் கூறவேண்டியது என்னவெனில், ஜப்பானியப் பொது மக்களைப்பற்றி நினைக்கும் உங்களுக்கு ஒரேயடியாக ஏற்றுக்கொள்ளக்கூடியவைகள் 90வீதமிருக்கின்றன. ஒரேயடியாக ஏற்றுக்கொள்ள முடியாதவைகள் 10வீதம் குறைவாகவே இருக்கின்றன. அப்படியானால், ஏற்றுக்கொள்ளக்கூடிய அனைத்தையும் மக்களுக்காகச் செயல்படுத்த நீங்கள் ஏன் ஒன்று சேராமலிருக்கிறீர்கள்? ஒரே அமைப்பு, ஒரே கட்சியாக செயல்படாமலிருக்கிறீர்கள். இன்று மாநாடு முடிவடையம் போது, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைத் தேடவேண்டிய தேவையும், துணிவும் உங்கள் ஒவ்வொருவருக்கும் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். பிரிந்து தனித்தனியாகப் போராடிய நீங்கள் ஒன்று சேர்ந்து முதலாவது போராட்டத்தை ஆரம்பியுங்கள். அப்போது உங்களுக்குத் தெரியவரும் ஒற்றுமையின் பலம் எப்படிப்பட்டது என்று எப்போதுமே ஒன்றாக இருக்கவேண்டுமென்று அப்போது தெரியவரும் ஒரேயொரு பாட்டாளி வர்க்கக் கட்சியை உருவாக்க வேண்டுமென்று போராட்டத்தின் மூலம் மட்டுமே அப்படியொரு பாட்டாளி வர்க்கக் கட்சியை உருவாக்க முடியும்.. இந்நாட்டு ஜனநாயகத்துக்குள் அநேகமான போராட்டங்களை உங்களால் நடாத்த முடியும். மக்களின் கண்களைத்திறக்க முடியும் மக்களுக்கு விளக்கத்தைப் பெற்றுக் கொடுக்க முடியும். மக்களிலான போராட்டத்தை சரியான இலக்கை நோக்கி கொண்டு செல்ல முடியும். மக்களை ஒரே கொடியின் கீழ் ஒரே சக்தியாக அணி திரட்ட முடியும். வார்த்தைகளால் மாத்திரம் அதனை நிறைவேற்ற முடியாது. இந்நாட்டு மக்களை ஏற்று மைப்படுத்த 'உலக பாட்டாளிகளே ஒன்றுபடுங்கள்' என்ற கோஷத்தை உண்மையாக்க, பாரிய வேலைத்திட்டமொன்றை உங்களால் செய்ய முடியும் என்பது எமது நம்பிக்கை.

சிறிலங்கா பாட்டாளி வர்க்க அமைப்பு வாழ்க!

ஜப்பானிய பாட்டாளி வர்க்க அமைப்பு வாழ்க!

அனைத்துலக பாட்டாளிகளின் ஒற்றுமை நீடுழி வாழ்க!.....!.!

படிப்பகம்

www.padippakam.com



அரசியல் குறிப்பு



பொதுசன முன்னணி அரசாங்கம் சில தினங்களுக்கு முன் ஆகஸ்ட் மாதம் 28 ம் திகதி நடத்தவிருந்த மாகாணசபைத் தேர்தலை ஒத்திவைத்துள்ளது. ஜனாதிபதி அதிகாரத்தை பாவித்து விசேஷ வர்த்தமானி அறிக்கை ஒன்றின் மூலம் அவசர காலச் சட்டத்தின் கீழ் தேர்தலைப் பின்போடப்பட்டிருக்கிறது.

இதன் மூலம் இலங்கைவாழ் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு தங்களது விருப்பத்தை தெரிவிக்கும் சுதந்திரத்தைப் பறித்துவிட்டது.

தேர்தலுக்கு முகம் கொடுக்கும் சவாலை ஏற்றுக்கொள்வதற்கு பதிலாக வஞ்சகமான வழியில் நழுவிச் செல்லும் அரசியலைப் பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியாளர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர்.

அரசாங்கமொன்று நெருக்கடியானபோதும் வெற்றியின் போதும் எப்படி செயற்பட்டாலும் அது நேரடியாகவே சமூகத்தின் மீதும் மக்கள் வசமுள்ள ஜனநாயக உரிமைகள் மீதும் பாரிய விளைவுகளை ஏற்படுத்துவனவாகும்.

அதாவது சுதந்திரமான நியாயமான தேர்தலை உரிய காலத்திற்கு நடாத்தி மக்களின் கருத்துக்கு மதிப்பளித்து கட்டியெழுப்பப்படும் ஜனநாயக சூழலை தோற்றுவிப்பதற்கு பதிலாக, இதற்கு மாறான செயற்பாட்டையே பொதுசனமுன்னணி தேர்ந்தெடுத்துள்ளது.

இவ்வாறு பொதுசன முன்னணி அரசாங்கம் தனது இருப்பு தொடர்பான கேள்வியின்போது கையிலெடுத்திருப்பது ஜனநாயக விரோத செயல் என்பது நன்றாகத் தெளிவுபடுகின்றது. ஆனால், அதற்கான சந்தர்ப்பத்தை விட்டு மௌனமாக இருப்பதென்பது இலங்கை சமூகத்துக்கு முடியாத காரணியாகும்.

பொதுசன முன்னணி அரசாங்கம் 94 ஆகஸ்ட் மாதம் பெற்ற வெற்றிக்கு 4வருடம் பூர்த்தியாகும் 98 - ஆகஸ்ட் 16 ம் திகதி சிக்கல் மிகுந்த இ[illegible] அரசியல் பிரச்சினையை மேலும் உயர்த்தி கேள்வி தொடுப்பதற்கு இன்[illegible] சமூகத்திற்கு வற்புறுத்தப்படும் முக்கியமானதோர் கேள்வியாகும். கடந்த நா[illegible] வருடங்களில் பொதுசனமுன்னணி அரசாங்கம் ஜனநாயகத்தை நி[illegible] நாட்டியுள்ளதாகவும், அதனால் சமூகத்தில் பாரிய நன்மைகள் ஏற்பட்டுள்ளத[illegible] இவர்களால் கூறப்படுகின்றது. இக்கதைகளை இப்போது கடுமையா[illegible] கேள்விக்குள்ளாக்க வேண்டுகிறது.

ஏனென்றால், பொதுசன ஊடகங்களின் வாயிலாகவும், பொதுசன முன்[illegible] அரசாங்கத்தின் தலைவி, தலைவர்களின் பேச்சின் போதும் 94ம் ஆண்டின் பி[illegible] ஜனநாயகம் மீள் உயர்வு பெற்றிருப்பதாக கூறப்படும். செய்திகளில் உண்[illegible] உள்ளதா? என்ற கேள்வியையும் சமூகம் ஆழமாகச் சிந்தித்து கேள்வியெ[illegible] வேண்டும்.

அதேவேளை, உண்மை அதற்கு எதிர்மாறாகவே அமைந்திருப்ப[illegible] காணக்கூடியதாக உள்ளது.

ஜனநாயக உரிமைகள் மூலம் பறிக்கப்பட்டு உயிர் வாழும் உரிமையைய[illegible] பறிக்கப்பட்ட ஓர் சமூகம் அந்த உரிமைகளை மீள பெற்றுக்கொள்வதற்க[illegible] தீர்மானகரமான போராட்டமொன்றுக்கு அடித்தளமிட்டுள்ளது. மிகவும் பாரி[illegible] தியாகங்களின் மூலம் இலங்கைச் சமூகம் 17 வருடம் கொலைகார பேயாட்சி[illegible]

# ஜனநாயகத்தின் கடைசி நிமிடத்துக்கு சற்று முன்...

ஏனெனில் பறிக்கப்பட்டிருக்கும் ஜனநாயக உரிமைகள் மீள வெற்றி கொள்வதற்கான காரணியின் முன்னால் இலங்கை சமூகம் பாரிய தியாகங்களைச் செய்திருக்கின்றது. அவ்வாறான தியாகங்கள் ஊடாக மாத்திரமே தமது உரிமை வெற்றிகொண்ட அனுபவமுள்ள ஓர் சமூகத்துக்கு மீண்டும் ஒவ்வொன்றாக பறிக்கப்படும் உரிமைகளின் முன்னால் மீள் கேள்வியெழுப்புவதென்பது ஓர் நிபந்தனையற்ற காரணியாகும்.

முடிவுகட்டி 94ம் ஆண்டு வெற்றிபெற்றதாக நினைத்தனர்.

அதாவது 94ம் ஆண்டுக்கு முன்பு சமூக தேவையாக இருந்து ஜனநாயகத்[illegible] மீள நிலைநாட்டும் தீர்மானகரமான காரணிக்கு பொதுசன ஐக்கிய முன்னணி[illegible] பொதுமக்களினதும், சிவில் சமூகத்தினதும் பாரியதோர் எதிர்பார்ப்பாக இருந்தது.

இந்த நிலைமைக்கு தோள் கொடுப்பதாக கூறிக்கொண்டே பொதுசன ஐக்[illegible]

எந்தவொரு நாட்டிலேனும் எந்தவொரு சமூக பொருளாதார பின்னணியின் கீழும் சமூக இயக்கமொன்று உருவெடுப்பது அந்த சமூக பொருளாதார முறையினால் சமூகத்திற்கு பெற்றுக்கொடுக்கவேண்டிய பல காரணிகள் தீர்க்க முடியாதபோதும் அப்படி இல்லையெனில், அச் சமூக அமைப்பினால் தீர்வை வழங்குவதற்கு முடியாது போகும்போதும் மக்களின் பிரச்சினைகளை தீர்வை, சமூக தேவைகளுக்கு பதில் அளிக்க, முடியாது போகும்போது, அதோ ..., அந்நாளிலிருந்து புதியதோர் சமூக முறைமையின் தேவை மேலெழுகிறது. அத்தோடு இறந்துகொண்டிருக்கும் பழைய சமூக முறைமைக்கும் உருவாகிக் கொண்டிருக்கும் புதிய சமூக முறைகளுக்கும் இடையே இடைவிடாததும் தணிந்து போகாத போராட்டம் ஆரம்பமாகின்றது. இப்போராட்டம் சமூகத்துக்கு வெளியே, மனிதர்கள் மத்தியில் காணக் கூடியதாகவும் உள்ளது. கேட்கக் கூடியதாகவும் பல வடிவங்களில் மரண வீட்டுச் சங்கம், சுற்றாடல் இயக்கம் மனித உரிமை சங்கங்கள் வரை சென்று விரிவான சமூக நெருக்கடி, வேறு வடிவில் முன்வருவது இனவாத போர்வையிலாகும். தனது இனத்தை கட்டிவளர்ப்பதாக கூறிக்கொள்ளும் இவ்வாறான அமைப்புகள் இறுதியாக பயங்கரகவாத தீவிர வாத அமைப்புகளின் மடியிலேயே தஞ்சமடைகின்றன. இந்நாட்டு சரித்திரத்திலும் உலக சரித்திரத்திலும், இதுபோன்ற இனவாத அமைப்புகளின் அனுபவம் மக்களுக்கு தெரிவிப்பது அந்த பாடங்களேயாகும். இதுபோன்ற இனவாத அமைப்புகள் மக்களுக்கு கூறுவது உலக இனவாத வரலாற்று பாடங்களையேயாகும். முதலாளித்துவ அமைப்பு முறையின் கொடூரமான ஒடுக்குமுறையின் பலனாக எழுந்தது. இதுபோன்ற இனவாத அமைப்புகளின் மக்களுக்கு மிகவும் கொடிய முறையில் முழு சமூகத்தின் உடமையும் இவ்வேளையில் மிக அகோரமான முறையில் சாகடித்து வருகின்றது. இவ்வாறு தேசியத்தை பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு, சிங்கள இனத்தை போற்றி தமிழ் இனத்தை ஒடுக்கி கொடிய விளைவுகளை ஏற்படுத்தும் அடிப்படையில் சிங்கள இனவாத அமைப்பொன்று வளர்ச்சி பெற்றுக்கொண் டிருக்கின்றது. இந்த இனவாத அமைப்பு எதிர்காலத்தில் மிகத் தீவிரவாத அமைப்புகளின் தேவையைப் பூர்த்தி செய்வதிலேயே சென்று நிற்கும். அவ்வாறானதோர் இனவாத அமைப்பைப் பற்றித் தெரிந்துகொள்வோம்.

பேயின் முதலாவது குழந்தை

கிரிபத்கொட ஐக்கிய சிங்கள வியாபாரிகளின் சங்கம், சிங்கள வியாபாரிகளின் ஒரேயொரு வியாபாரச் சங்கமாகும். கிரிபத்கொடை சிறிய நகரத்தில் சகல வியாபார அதிகாரங்களும் இந்த சங்கத்திடமே தங்கியுள்ளது. சில காலமாக செயல் ரீதியாக செயல்பட்டுவரும் சங்கமாகும் அவர் ஓர் முஸ்லீம் வியாபாரி. பெயர் நலிம் ஹாஜியார். கிரிபத்கொட நகரம் நாளுக்கு நாள் வளர்ச்சிபெறும் நகரம் என்பதினால் அவர் கிரிபத்கொடை நகரில் ஓர் வியாபார நிலையத்தை ஆரம்பிக்க யோசித்தார். அரச அடவு ஏற்றுமதி வங்கியில் கடனைப் பெற்றுக்கொண்டு கடனைப் பெறுவதற்கு உதவியவர் ஐக்கிய சிங்கள வியாபார சங்கத்தின் முன்னாள் பொருளாளரும், ஜனதா டிரேட் சென்றின் உரிமையாளருமாகும். 'பயிரஹ' (Bairaha) கோழி இறைச்சி வியாபாரத்தை ஆரம்பித்தாதர். ஆனால் ஆரம்பம் முதல் இந்த நடவடிக்கைக்கு கடுமையாக எதிர்ப்பைக் காட்டுவதற்கு ஐக்கிய (?) சிங்கள வியாபார சங்கம் பின்நிற்கவில்லை. ஆயினும் நலிம் ஹாஜியார் வியாபாரத்தை ஆரம்பித்தார். 1998 மே மாத நடுப்பகுதியில் சுபவேளையில் வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கு சகல ஏற்பாடுகளையும் செய்து, கடனை பெறுவதற்கு தமக்கு உதவிய 'ஜனதா' முதலாளிக்கு உத்தியோகபூர்வ அழைப்பொன்றை விடுத்து திறப்பு விழாவில் கலந்துகொள்ளும்படி கேட்டார். ஐக்கிய (?) சிங்கள வியாபாரச் சங்கம் இதை ஆரம்பமுதல் எதிர்த்த போதிலும் இந்த உத்தியோகபூர்வ அழைப்பை 'ஜனதா' முதலாளியால் மறுக்கமுடியவில்லை. அதனால் அவர் அந்த ஆரம்ப விழாவில் கலந்துகொண்டார். ஆனால் வியாபார சங்கத்தில் மற்ற எல்லோரும் இவ்விழாவை பகிஷ்கரித்தனர்.

சம்பவம் ஆரம்பமானது அவ்வாறேயாகும். கொடூர காடையர்களின் வெறியாட்டம் அன்றிரவாகும். அப்பிரதேச அரசியல் பெரும்புள்ளி ஜினதாஸ நந்தசேனவாகும். அவர் (பாராளுமன்ற உறுப்பினர் பொ.ஐ.மு) சிங்கள வியாபார சங்கத்தின் நிரந்தர அங்கத்தவராவார் போலவே அதன் பாதுகாவலனுமாவார். ஜினதாச அன்றிரவு (அப்பகுதி) எல்லா பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கும் இரவு 9 மணிக்குப் பிறகு ஒரு மணி நேரம் வரை பொலிஸாரின் நடமாட்டத்தை நிறுத்தும்படி உத்தரவிட்டார். 'அம்பசெவன' மதுபானசாலை, 'ஓமலக்கு' மிகுதி வேளை அனைத்தையும் ஒப்படைக்கிறார்.

அவனுக்கு

அரசாங்க ராணுவத்தில் சிலரின் உதவி அரசியல் பெரும்புள்ளி ஒருவரின் மூலம் கிடைக்கிறது, சரியாக இரவு 10 மணி அளவில் மூன்று கிலோ மீட்டர் தூரமாகும்) பொலிஸார் வருமுன்பே அயலில் உள்ளவர்களினால் தீயை அணை[illegible] கட்டிடத்தை காப்பாற்றினர்.

# சிங்கள பிரபாகர[illegible]




நலிம் ஹாஜியாரின் கடைக்கு குண்டுகளால் தாக்கப்படுகிறது. அதுமாத்திரமல்ல திறப்புவிழாவில் கலந்துகொண்ட வியாபார சங்கத்தின் பொருளாலரின் கடைக்கும் குண்டு வீசப்படுகின்றது. அதே நிமிடத்தில் பக்கத்திலுள்ள பொலிசுக்கு தகவல் கொடுத்தும் பொலிசார் ஒரு மணி நேரத்துக்குப் பின்பே வருகின்றனர். (சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து

இச்சம்பவத்திலிருந்து நழுவிய பொலிஸ் இன்றுவரை இச்சம்பவத்துக்கு உரிய நபர் எவரையும் கைது செய்யவில்லை. அதேவேளை நலிம் ஹாஜியார் த[illegible] முடிவை மாற்றிக்கொண்டார். வியாபாரத்துக்கு மேல் அவருக்[illegible] அவரின் குடும்பத்தினதும் உயர் முக்கியமென்பதால் இவ்வாறான முடி[illegible] எடுத்தார்.

இக்கிய (?) வியாபாரச் சங்கத்[illegible] இந்த காடைத்தன[illegible]



படிப்பகம்

www.padippakam.com



வியின் ஆட்சி பீடமேறியன.
வாறு ஆட்சி பீடமேறிய பொதுசன முன்னணி இப்போது 4 வருடங்களைப் செய்த வண்ணமிருக்கின்றது. அந்த 4 வருடங்களில் 17 வருட போராட்டத்தின் சென்று. அதாவது 94-ஆகஸ்ட் முதல் மீள உறுதியாக நிலைநாட்டவிருந்த க உரிமைகளைப் பறித்தெடுக்கும் கொடிய செயலில் இறங்கியுள்ளது.
ங்கை சமூகம் மிகவும் ஆழமான அரசியல் சமூக நிந்தனையின் முன்னால் பத்தைப் பூரணமாக நிலைநாட்டுவதற்காகக் கொண்டு வரப்பட்ட அரசாங்கம், ந்து மீண்டு தனது நெருக்கடியின் முன்னால் வன்முறையை தேடிச் செல்கின்றது. தலைப் பின்போட்டு நாட்டில் ஜனநாயகத்துக்கான சூழலை பறித்தெடுக்கும் ல் அலையொன்று மீள எழுந்திருப்பது இவ்வாறேயாகும்.
வாறு ஒரு கடவை இலங்கை மக்களுக்கு அனுபவமாய் இருந்த செயல் துமுறையை) பாடுகளை பயன்படுத்தி, அதிலிருந்து மீட்பதாகக் கூறிய பொதுசன முன்னணி அரசாங்கம் இன்று தங்களது பழைய வர்க்க எஜமான் கையாண்ட ரியத்தையே கையாள்வதற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றனர்.
ாதுசன ஐக்கிய முன்னணி இப்போது தமது இருப்பை உறுதிப்படுத்துவதற்காக முறையை கட்டவிழ்த்துவிட்டிருக்கிறது. ஜனநாயக விரோத செயல்களிலேயே யுள்ளது என்பது இப்போது நன்றாகத் தெளிவுபட்டுள்ளது.
துசன ஊடக பிரிவும், மனித உரிமைகளாலும் , அரசியல் பிரிவினராலும் எந்தவொரு குழுக்களுக்கோ தனிநபர்களுக்கோ தம்வசம் இருக்கின்ற தகுதி செயற்பாடுகளை மீண்டும் மக்கள் மீது சுமத்தப்படும் மக்கள் விரோத, பகத்துக்குக் குந்தகமான செயற்பாடுகளுக்கு எதிராக மீண்டும் குரல்கொடுக்கும் காமான செயற்பாட்டை சமூகம் வேண்டி நிற்கின்றது.
வும் அருவருக்கத்தக்க அனுபவமாக நவீன வியாபார சந்தை அரசாங்கத்தினால் டப்படும் ஒற்றுமைமிக்க பங்களிப்புக்குப் பதிலாக சுயநலத்தையும், லாபத்திற்கான பாட்டுக்கு பதிலாக சுசப்பான உண்மை அரசியலை கட்டியெழுப்பும் ந்துக்கான குரலை நேர்மையான நபர்கள், குழுக்கள், அமைப்புகளிலும், சமூகம் ர்க்கிறது.
ஜே.ஆர். தாம் நினைத்தபடி பகிரங்கமாகவும், மறைமுகமாகவும் மக்களின் அரசியல் உரிமைகளை பறித்த அனுபவம் மீண்டும் தேவைப்படுவது இப்போதேயாகும்.

10 வருடத்திற்குத் தேர்தல் வரைபடத்தை சுருட்டி வைப்பதாக ஓலமிட்டபோது மக்களிடம் இருந்து மறைத்து வைக்கப்பட்டிருந்த தான்தோன்றித்தனமான, கொலைகார பேயாட்சி தொடர்பாக அன்றைய சமூகம் விழிப்படையவில்லை. அப்போது ஜே.ஆரின் தெளிவில்லா சிங்களத்தைக் கேட்டு, சிரிப்பதற்கு மாத்திரமே வரையறுக்கப்பட்டிருந்த மக்கள், ஆனால் சிரிப்பதாக நினைத்துக் கொண்டிருந்த அன்று ஜே.ஆர் அடக்குமுறை, தான்தோன்றித்தனமான செயற்பாடுகளின் முன்னால் சிரிப்பதற்கு மிச்சமிருக்கவில்லை.

அதன் பின்பே, எல்லாக் கட்சிகள், குழுக்களும் முழு சமூகத்தையும் தலைகீழாக மாற்றியமைத்து ஜே.ஆர் உட்பட முதலாளித்துவ அரசாங்கத்தின் தேவையின் நிமித்தம் அனைத்து உரிமைகளும் புதைக்கும் அரசியல் மாத்திரமே மிச்சமிடப்பட்டது.

அப்போது குரல்கொடுக்கக்கூடிய, நெருக்கடி கொடுத்து அழுத்தத்தை ஏற்படுத்துவதற்கு முடிந்த சக்திகளும் வாய்பூட்டி, வாய்மூடி இருப்பதிலிருந்து மிகுதியாக அவர்களுக்கு மரணப்பொறி மாத்திரமே மீதமிருந்தது. 1994ம் ஆண்டு படிப்படியாக



இவ்வாறு பொதுசன முன்னணி அரசாங்கம் தனது இருப்பு தொடர்பான கேள்வியின்போது கையிலெடுத்திருப்பது ஜனநாயக விரோத செயல் என்பது நன்றாகத் தெளிவுபடுகின்றது. ஆனால், அதற்கான சந்தர்ப்பத்தை விட்டு மௌனமாக இருப்பதென்பது இலங்கை சமூகத்துக்கு முடியாத காரணியாகும்.

மேலெழுந்துவந்து வந்தாலும் கூட இனவாதத்துக்கு எதிராக அமைதியான அரசியல் இறுதியாக பாரிய தூணாகியாக வளர்ந்து 17 வருட பேய் ஆட்சியை விரட்ட முடிந்தது.

அதேவேளை அப்போது ஐ.தே.க. வுக்காக சார்பானவற்றைத் தவிர உண்மையான சமூக மாற்றத்துக்காக செல்வதற்கு முடியாது போனது. ஜனநாயகம் பற்றி விதைத்த அபூர்வமானதும் , ஆச்சரியமான இயக்கத்தின் மூலம் ச.ப.கு அம்மையார் உட்பட அவரது குரங்கு கூட்டத்திற்கு வெற்றி கிட்டியது. இவ்வாறான சூழலிலேயாகும்.

ஆனால் இப்போது அவர்களது கூற்று அனைத்தும் கும்பகரனின் தூக்கமாக மாறியுள்ளதால், அரசியல் ரீதியில் அவசரமாக விழிப்படைய வேண்டுமென நிர்ப்பந்திக்கிறது.

விரிவடைந்துவரும் பொதுசன ஊடகங்கள் மூலமாகவும் சர்வதேச ரீதியில் கிட்டும் நெருங்கிய நட்பின் ஊடாகவும், அனுபவமிக்க மக்கள் வாழும் ஓர் சமூகத்தில் இந்த யதார்த்தத்தை தேடிக்கொள்வதைத் தவிர அரசாங்கம் போடும் தாளத்துக்கு ஏற்ப தலையசைத்து செயலற்றிருப்பதற்கு இன்றைய சமூகத்தின் முன்பு மிச்சம் இருப்பது எதுவுமே இல்லை.

# ...களின் நகரமான




...வாத செயற்பாடுகள்
...படுத்துவது தமிழனுக்கோ
...முஸ்லிம் என்றாலும்
...ணயில்லை) வியாபாரம்

வியாபாரச் சங்கமாகும் . இப்படி கூறுவதற்கு தெளிவான சாட்சிகள் உள்ளன.

இனவாத சிங்கள

...கர்ந்த இடமளிக்க முடியாது. ...தேவையே மேலோங் ...க்கிறது. அவர்கள் அம்முடிவை ...கொடை நகரத்தில் ...படுத்தி முடித்துள்ளனர். இது ...ய சிங்கள வியாபார சங்கத்தின் ...கையாகல்ல. இனவகள் சிங்கள ...'தஹனவின்' கொள்கைகளாகும்' ...ள வீரவிதஹன' என்ற பேயின் ...கைகள் ...கொடை. ...ய (?) ...ள

வீரவிதஹனவின் கொள்கைகளான எந்தவொரு தமிழ் முதலாளிக்கும் வியாபார நிலையம் திறக்கவிடக் கூடாது. ஐக்கிய சிங்கள வியாபாரிகள் சங்கத்தின் கொள்கையும் அதுவே. இப்போது கிரிபத்கொடையில் இருந்து எல்லா தமிழ் கடைகளும் விரட்டப்பட்டுள்ளன. எஞ்சியிருப்பது ஒரே ஒரு முஸ்லிம் கடை மாத்திரமேயாகும். அதுவும் நகரத்தில் இருக்கும் ஒரே ஒரு இறைச்சிக் கடையாகும். இனவாத சிங்கள வீரவிதஹன வின் கொள்கையான, தமிழ் கடைகளில் பொருட்களை வாங்குவது இல்லையென்றும், ஐக்கிய சிங்கள வியாபார சங்கத்தின் கொள்கையும் அதுவேயாகும். சிங்கள வீரவிதஹனவின் கொள்கை தமிழ் மொழியில் பெயர் பலகை போடக்கூடாது. தமிழ் ஊழியர்களை தொழிலுக்கு அமர்த்தக் கூடாது. ஐக்கிய சிங்கள வியாபார சங்கத்தின கொள்கையும் அதுவே. அண்மைக்காலங்களில் சிங்கள வியாபார சங்க உறுப்பினர்களின் உதவியோடு சி.ஐ.டி யினரால் கிரிபத்கொடை நகரில் கடைகளில் தொழில் செய்யும் தமிழ் ஊழியர் அனைவரது தகவல்களையும் சேகரித்துச் சென்றுள்ளனர்.

எழுதியது எழுதப்படாதது எல்லா விடயங்களையும் ஒன்று சேர்க்கும்போது வியாபார சங்கமென்பது இனவாத சிங்கள வீரவிதஹன இயக்கமாகும். கிரிபத்கொடையில் முஸ்லிம் ஒருவரின் வியாபார நிலையத்துக்கு குண்டு தாக்குதல் நடத்தி அழித்த செயல் ஜனநாயகத்தைப் பறிக்க இலங்கையில் ஓர் சம்பவம் மாத்திரமல்லவென நாம் அறிவுறுத்திக் கூறுகின்றோம். இது நாள் வரை மௌனமாக அஹிம்சைவாதிகளாக சிங்கள இயக்கங்களை மாத்திரம் பேசி செயற்பட்டுவந்த சிங்கள வீரவிதஹன தமது குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்வதற்காக அகிம்சை என்ற பதத்தை அகற்றியுள்ளது. அப்படியில்லாவிட்டால் அவர்களது குறிக்கோள் நிறைவேற்றிக்கொள்வதற்கு பழைய வடிவம் செல்லுபடியாகாத ஒன்றாகும். மேற்கூறியவை அவர்களது புதிய வடிவத்தின் செயற்பாடுகளாகும். தமது பழைய வடிவம் செயல் இழந்து செல்லுப்படியாகாதபோது தங்களது இனவாத இலக்கை முழுமையாக அடைவதற்காக ' சிங்கள வீரவிதஹன' தனது பழைய முறையை மாற்றியமைத்து புதிய வகையான வடிவத்தைக் கையாள்கின்றது. அது நல்ல வழி அல்லது தீய வழியில் போன்றதோர் நிலைப்பாட்டின் ஊடாக செயற்படும் பயங்கரவாத நடவடிக்கையாகும். இது நாள் வரை சிங்கள மக்களின் மனநிலையோடு உறவாடிக்கொண்டிருந்த (சிங்கள வீரவிதஹன) தேவையான அதிகாரபலம், பணபலம் 'சிங்கள வீரவிதஹன ' வை சூழ அணிதிரண்டவண்ணமுள்ளது.

வெளிப்பாடும் உள்ளடக்கமும்.

கிரிபத்கொடை ஐக்கிய (?) சிங்கள வியாபாரச் சங்கத்தின் தமிழ் விரோத வரலாறு நீண்ட கதையாகும். 90 பத்தாண்டு கால முதல் இரண்டு வருட கால இறுதிப் பகுதியில் கிரிபத்கொடை சந்தியில் ' சுநந்த டிரேட் சென்றர்' ஆரம்பிக்கப்படுகின்றது. அதன் விளம்பர பலகையில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் அடங்கியிருந்தது. ஆனால் அப்போது ஐக்கிய வியாபாரச் சங்கம் இந்த தமிழ் மொழியில் அடங்கியிருக்கும் அறிவிப்புப் பலகையை கடுமையாக எதிர்த்து அப்பெயரை அகற்றும்படி சுநந்த ரேட் சென்றை வற்புறுத்தியதால் அதன் பயனாக தமிழ் எழுதப்பட்டிருந்ததை 'செலோடேப்' மூலம் மறைக்கப்படுகிறது. இவர்கள் அன்று தமிழில் பெயர் பலகை எழுதியதை எதிர்த்தனர். இன்று தமிழ் வியாபாரிகளுக்கு வியாபார நிலையங்களை வழங்கக் கூடாதென்றும், நாளை இந்த எதிர்ப்பு அப்பிரதேசத்தில் வாழுகின்ற தமிழர்கள் அனைவரையும் வெளியேற்றும் கொடூர செயல்வரை செல்லும் என்பது மாத்திரம் உறுதி. இது 'சிங்கள வீர விதாஹன' வின் கிரிபத்கொடை பிரதேச செயற்பாடுகள். அனுராதபுரம், பொலனறுவை, மஹியங்கனை போன்ற பிரதேசங்களிலும், இதன் செயற்பாடுகள் வெளிப்படுவது இதற்கு மாறான வழியிலாகும். இவர்களது புதிய கருத்துமிக்க வேலைத்திட்டம் கொழும்பு நகரில் தமிழரின் வியாபார நிலையங்களை பறித்தெடுப்பதேயாகும். இப்போதும் ஓர் அங்கத்தவரிடமிருந்து 5 லட்ச ரூபாய் திரட்டி இப்போது இந்த அமைப்பின் கைவசம் 8 கோடி ரூபாய் உள்ளது. இப்பணத்தின் மூலம் தமிழ் வியாபாரிகளின் வியாபார ஸ்தாபனங்களை விலைக்கு வாங்கும் புதிய இயக்கமொன்றை கொழும்பு நகரில் ஆரம்பித்துள்ளனர்.

இந்த அனைத்து சம்பவங்கள் ஊடாக தெளிவுபடுவது என்னவெனில் பலகாலங்களாக சிங்கள இன மக்களிடம் தோன்றிய சிங்கள இனவாத மனநிலையில் அகிம்சையாக செய்யப்பட்ட இவர்கள் இப்போது அகிம்சை மனநிலையை மாற்றி வன்முறை ரீதியிலான அமைப்பாக மாறியுள்ளனர். இன்று தமிழ் இனவாத அமைப்பு ஆயுதபாணிகளாக செயற்படுவது கடந்த காலத்தில் தொடர்ந்து வந்த இவ்வாறான காரணிகளுக்கு முகம் கொடுத்து ஆரம்பம் அகிம்சை இன்று வன்முறை ஆயுத போராட்டம் வரை சென்றிருப்பது இவ்வாறான செயற்பாடுகளின் மூலமேயாகும். இவை முதலாளித்துவ அமைப்பின்

7ம் பக்கம் பார்க்க......



# கூட்டு புதைகுழியும் நட்பு சமுகமும்

கூட்டு புதைகுழிகள் என்பது எமது நாட்டில் கிரிக்கட் விளையாட்டைப்போல் சாதாரண சம்பவங்களாக மாறியள்ளது. இச்சம்பவங்கள் எவரது மனதிலும் துன்பத்தை தோற்றுவிக்கும் சம்பவங்களாகவின்றி தேவையற்ற நிகழ்வாக கீழ்தள்ளப்பட்டுள்ளது. ஏனெனில் இந்நாட்டில் 2500 ஏக்கர் சுற்றில் கூட்டு புதைகுழிகள் வகைதொகையின்றி தேடிக்கொள்ள முடிவதால். எமது நாட்டில் ஒரு காலத்தில் தோண்ட தோண்ட மாணிக்கற்கள் கிடைத்ததுபோல் இப்போது தோண்ட கிடைப்பதோ கூட்டு புதைகுழிகளின் எலும்புக்கூட்டுகளாகும். இக்கட்டுரையை நாம் எழுதும் நோக்கம் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழிகளை ' என்ன ஆச்சரியம்' பற்றி உங்களுக்கு தெரிவிப்பதற்கல்ல முற்றாகவே அதற்கு மாறான புதிய தகவல்களை உங்களுக்குபொருத்தமான கூட்டு புதைகுழிகளில் கொலைசெய்து புதைக்கப்பட்ட ஒரு லட்சத்துக்கு அதிகமாக இலங்கை புத்திர புத்திரிகளின் எலும்புகூட்டுகள் தற்போது இலங்கையில் இருக்க கூடிய இரண்டு கட்சிகளென்றும் மூன்றுவேளையும் கொன்று குவிக்கப்படும்' 'மக்களின் பிரதிநிதிகளால்' இரண்டு கட்சிகளிலும் உண்மை நிலமையை இதன் மூலம் வெளிப்படுவதால்

எப்படியாயினும் நடந்து முடிந்த அநீதிமிக்க சம்பவங்கள் பற்றியும் அதன் பிறகு அது தொடர்பான கமிஷன் நடவடிக்கைகள் பற்றி தெளிவடைய வேண்டியுள்ளதால் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட நூற்றுகடகணக்கானோரை கொன்று புதைக்கப்பட்ட இரண்டு புதைகுழிகளை படலந்த வதைமுகாம் யாழ்ப்பாணத்தில் செம்மணி புதைகுழிகள் தொடர்பான பூரணவிபரம் கீழ் தரப்படுகின்றன.

## அமைச்சரின் செயலாளர் இல்லத்தில் கூட்டு புதைகுழிகள் !

*கூட்டு புதைகுழிகளை கண்டுபிடித்த சம்பவ கோர்வை -*

* சபுகஸ்கந்த படலந்த வதைமுகாமுக்கு 150 மீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும் இலங்கை பெற்றோலிய கூட்டுதாபணத்துக்கு சொந்தமான வீட்டுக் கட்டிட தொகுதியில் பிரதி தொழில் அமைச்சரின் இணைச் செயலாளர் என்று கூறப்படும் சோமசிறி குமணாயகவுக்கு வீடொன்றை பெற்றுக் கொடுத்தல்.
* பின் அந்த வீட்டை தோண்டும் போது கொங்கிரிட் 'Slab' ஒன்றின் கீழ் பாரிய குழியொன்றின் கீழ் மனித எலும்பு கூடுகளை கண்டுபிடித்து அதை தோண்டாது முடிவிடுதல்.
* தனது உத்தியோகபூர்வ இல்ல விராந்தாவின் கீழ் புதைகுழிகள் இருப்பதாக இந்த இணைச் செயலாளர் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன இயக்குனர் சேன திஸாநாயகதுக்கு அறிவித்தல்.

புதைகுழிகள் இருப்பது தொடர்பான எதுவிதமான விசாரணைகளின்றி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இணைச் செயலாளரை அவ் இல்லத்திலிருந்து வெளியேறும்படி கோருதல்

புதைகுழிகள் பற்றிய தகவல்கள் நாட்டின் பொதுசன ஊடகங்கள் மூலமாகவும் பொதுசன முன்னணி அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவரின் செயலாளரினால் தகவல் முன்வைக்கப்பட்டிருந்த போதும், அரசாங்கமும், அரசாங்கத்தினால் வழிநடத்தப்படும் பொலிஸாரினாலும். இந்த கூட்டு மனித புதைகுழிகள் தொடர்பாக என்ன விசாரணைகள் செய்துள்ளனர்? சபுகஸ்கந்த பொலிஸ் இதற்கான விசாரணையை நடத்தாமல், அதை தடுத்து நிறுத்திய அரசாங்க உயர்மட்ட அரசியல்வாதி யார்?

## சிந்தித்து பாருங்கள் !

கொழும்பிலிருந்து 200 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும் இலங்கையின் மிகவும் கரடு முரடான கஷ்ட பிரதேசத்துக்கு குலை நடுங்கும் குளிர் பிரதேசத்தில் எவராலும் கூறப்படாதபோதும், சூரியகந்த கூட்டு புதைகுழிகள் தோண்டுவதற்காக படையெடுத்துச் சென்ற சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க, தமது ஹொரகொல்ல (வலவ்வ) மேட்டுக்குடி இல்லத்திலிருந்து 15 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும் இவ்விடத்துக்கு போக மறுப்பதேன்?

இது தொடர்பாக குறைந்தபட்ச விசாரணையேனும் நடத்துவதற்கு குறிப்பிட்ட அதிகாரிகளை கோருவதற்கு மறுப்பதேன்?

இந்த கூட்டு புதைகுழிகள் படலந்த வதைமுகாமில் கொலைசெய்யப்பட்டிருப்பது தென்பகுதி மக்களுக்கு அம்பலமாகிவிடுவதால் குறிப்பிட்ட புதைகுழிகள் தொடர்பாக அரசாங்கம் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையை என்னவென்று இப்போது நாம் கவனித்துப் பார்ப்போம். சபுகஸ்கந்தையிலிருக்கும் படலந்த வதைமுகாம் தொடர்பாக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட படலந்த ஆணைக்குழு அறிக்கையின் படி படலந்த சித்திரவதை முகாமில் கொலைசெய்தல், சித்திரவதை செய்தல், பாலியல் வல்லுறவுக்குள்ளான இளம் யுவதிகளை பற்றி பொறுப்பேற்க வேண்டிய 16 குற்றவாளிகளுக்கு படலந்த ஆணைக்குழுவினால் குற்றவாளிகளாக காணப்பட்டது.

1. ரணில் விக்கிரமசிங்க - ஐ.தே.க
2. சித்திரவதை முகாமின் பொறுப்பாயிருந்தவரை ஆணைக்குழுவினால் குற்றம் சுமத்தப்பட்ட இப்போது பொலிஸ் தலைமையகத்தில் ( LOGISTIC) பிரிவில் பிரதான சிரேஷ்ட உதவி பொலிஸ் அதிபர் மெரில் குணதிலக.
3. ஓய்வு பெற்ற பிரதி பொலிஸ் மா அதிபர் நலின் தெல்கொட
4. நாட்டிலிருந்து வெளியேறி வெளிநாட்டில் வாழ்வதாக கூறப்படும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி டக்ளஸ் பீரிஸ் உட்பட.

இன்னும் உயர் பொலிஸ் அதிகாரிகள் 12 பேரை குற்றவாளிகளாக படலந்த ஆணைக்குழு அறிவித்திருந்தது.

ஆனால் விசாரணை நடந்ததோ கீழ்மட்ட கனிஷ்ட பொலிஸ் அதிகாரிகளை மாத்திரமே C.I.D விசாரணை நடத்தி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது மாத்திரமே. உண்மையான கொலைக் குற்றவாளிகளான மேல் கண்ட மூவரிடம் குறைந்தபட்சம் வாக்குமூலமேனும் எடுக்கவில்லை.

இது தொடர்பாக நாம் தகவல்களை திரட்டிக்கொண்டிருந்தபோது எமக்கு கிடைத்த விஷேஷ தகவல் விசாரணையை மூடி மறைப்பதற்காக பொலிசும், அரசாங்கமும் யு.என்.பியினதும் கூட்டு நடவடிக்கைக்காக பற்றி விஷேசமாக பலவந்த ஆணைக்குழுவினால் பாரிய குற்றத்தை உள்ளாகியிருக்கும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மெரில் குணரத்னவை குற்றத்தை விசாரணை நடத்தினால் உண்மையாகவே தான் கொலைகாரணாக நிரூபிக்கபடுமென்பதை தெரிந்து கொண்டதால் அதிலிருந்து மீள்வதற்காக விசாரணை நடத்தப்படாமலிருக்கும் தற்போதய பொலிஸ்மா அதிபர் ராஜகுருவும், அந்த பொலிஸ் மா அதிபராக வருவதாக கூறப்படும், சிரேஷ்ட பிரதி பொலிஸ் அதிபர் லக்கி கொடிதுவிக்குவுடன் சேர்ந்து கூட்டமைத்திருப்பதால் விசாரணைமுடங்கியுள்ளது. உரிய முறைப்படி அந்த பொலிஸ் மா அதிபராக நியமிக்கபட வேண்டிய இப்போது பொலிஸ் தலைமையகத்தில் நிர்வாக பிரிவில் பொறுப்பாக கடமையாற்றும் பேராசிரியர் தர்மதாஸ சில்வாவை வெட்டி விட்டு லக்கி கொடிதுவக்குவை நியமிப்பதற்கு சந்திரிக்கா தீர்மானித்திருப்பதும் அதற்காக மெரில் குணரத்னவை,

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகாவும் (இவர் முன்னால் சிறிமாவின் அந்தரங்க பாதுகாப்பவையில் கடமையாறியவராவார்) பலவந்த கொலைகளுக்கு தொடர்பாயிருக்கும் ரணில் விக்கிரமசிங்க அநுர பண்டாரநாயக்காவும் (இவர் முன்னால் சிறிமாவின் அந்தரங்க பாதுகாப்பவையில் கடமையாற்றியவராவர்) படலந்த கொலைகளுக்கு தொடர்பாயிருக்கும் ரணில் விக்கிரமசிங்க அநுர பண்டாரநாயக ஊடாக சிறிமா மூலமும், சந்திரிகாவுக்கு விடப்பட்ட வேண்டுகோல் இதற்கான காரணமென தெியவருகிறது.

லக்கி கொடிதுவக்கு பொதுசன முன்னணியும் ஐ.தே.க இந்த இரு கட்சிகளினதும் வளர்ப்பு பிள்ளையாக மாறியிருப்பதே இதன் பிரதான காரணமாகும்.

சந்திரிக்காவின் பிரதான எதிரியாக கணிப்பிடப்படும் ரணில் விக்கிரமசிங்காவை பாரியதோர் பொறியில் சிக்கவைப்பதற்கு இந்த வதைமுகாமின் புதைகுழி சம்பவமும், படலந்த ஆணைக்குழுவின் முடிவுகளை நிறைவேற்றவும், கூடிய சம்பவங்களை சந்திரிக்கா மூடி மறைப்பதற்க உதவி வழங்குவது ஏன்?

அதேவேளை படலந்த வதை முகாமில் கொல்லப்பட்ட நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகளின் உடல்கள் புதைக்கப்பட்டிருக்கும் புதைகுழிகள் இந்த வீட்டுக் கட்டிடத் தொகுதியில் இன்னும் எவ்வளவு இருக்கிறது என்பதைபற்றி எந்த விதமான விசாரணையையும் நடத்தாது அரசாங்கம் பின்வாங்குவதேன்?

நாம் மிகவும் சரளமாக கேள்வியை கேட்போமானால் ஐ.தே.கயையும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினதும் ஆயிரக்கணக்கான கொலைகளை பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் மூடிமறைப்பது ஏன்?

## யாழ் செம்மணி குதைகுழிகள்

கூட்டு புதைகுழிகளை கண்டுபிடித்த சம்பவகோர்வை

1995ம் ஆண்டு வருட இறுதியில் அரசாங்கத்தினால் 'ரிவிரச' நடவடிக்கையை ஆரம்பித்தல்

1996 யூன் - யூலை மாதங்களில் யாழ் குடா நாட்டில் 580 இளைஞர் யுவதிகளை காணாமல் போகச் செய்தல்.

இக்காலப்பகுதியில் செம்மணி பிரதேசத்துக்கு ராணுவ பொறுப்பதிகாரியாக கடமையாற்றியது அதிகமான மனித உரிமைகளை மீறியதும் புதை குழிகள் தொடர்பாக குற்றவாளியாக காணப்படும். மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவாகும். செம்மணி பிரதேசத்தை அண்மித்த பிரதேசத்துக்கு கட்டளையிடும் அதிகாரியாக இருந்த இவர் '1989 ம் வருட நடுப்பகுதியில் களுத்துறை மாவட்டத்திலிருந்து மக்கள் விடுதலை முன்னணியை அழித்தெழிப்பதற்காக ஹம்பாந்தோட்டை வந்த முதல் நாள் இரவே ஹம்பாந்தோட்டை மாவட்ட வீதிகள் அனைத்திலும் இளைஞர் யுவதிகளின் 178 சடலங்களை கண்காட்சிக்கு வைத்து இலங்கை சரித்திரத்தில் கூடுதலான எண்ணிக்கை மரணம் கண்காட்சிக்கு வைத்த கறுப்புதினமாகவும் இடம் பெறுகிறது. 1996 - 09 - 97 த் திகதி சுண்டுக்குளி (செம்மணி பிரதேசம்) மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றுக்கொண்டிருந்த கிருஷாந்தி குமாரசாமி, பிரனவன், அயல் வீட்டின் சிதம்பரம் கிருபாமூர்த்தி ஆகியோரை கொலை செய்த குற்றத்திற்காக நடைபெற்ற விசாரணையின் போது 1வது குற்றவாளி கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவினால், வழக்கின் கடைசி தினம் 1998 - 07 - 03 திகதி ' நான் இவ்வாறு இந்த மாணவியையும் மற்றவர்களையும் கற்பழித்து கொலை செய்வதற்குமான காரணம் இதற்கு முன்பு மேற்கூறிய இரண்டு உயர் அதிகாரிகள் உட்பட மேலும் சில ராணுவ உயர் அதிகாரிகளும் இவ்வாறான கடத்தலும், கொலைகளையும் செய்துள்ளதால் அவ்வாறு கொல்லப்பட்டோரின் பாரியதோர் புதைகுழியொன்று செம்மணி பிரதேசத்தில் இருப்பதாகவும் தேவையேற்படின் அவைகளை என்னால் காண்பிக்க முடியுமென்றும் கூறினார்.

இதற்கு கூட்டு புதைகுழிகளில் 300 - 400 அதிகமான மனித உடல்கள் புதைக்கப்பட்டிருப்பதாக அவர் வெளிப்படுத்தினார்.

இதேபோல் அப்பிரதேசத்திலிருக்கும் பெரியதோர் 'கிணற்றுக்குள் இளைஞர் யுவதிகளின் 75 அதிகமான உடல்கள் கிடப்பதாக கூறினார்.

இந்த விடயம் இதே கோப்ரலினால் இதற்கு முன்பும் (மோதத்துக்கு முன்பு) ராணுவ பொலிஸிடம் முறைப்பாடு செய்தபோது ராணுவ பொலிஸ் இதை மூடிமறைத்துள்ளனர் பின்பு இச்சம்பவம் அம்பலமாகிய பிறகு பொலிஸ் மா அதிபர் விசாரணை நடத்துவதற்கு C.I.D க்கு ஒப்படைத்துவிட்டதாக கூறினாலும் இன்று வரை எதுவிதமான விசாரணைகள் விசாரணைக்குழுவொன்று சென்று செம்மணி பிரதேசத்தில் எதுவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லையென்பதே உண்மை. முக்கியமாக தேவைப்படுவது விசாரணை ஆரம்பிக்கும்வரை குறிப்பிட்ட பிரதேசத்திற்கு பாதுகாப்பும் வழங்கப்படவில்லை. அதற்க பதிலாக C.i.D முயற்சிப்பது இத்தகவலை வெளியிட்டு இப்போது கிருஷாந்தி குடும்பத்தை கொலைசெய்த குற்றத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் 5 ராணுவ வீரர்களை பொலிஸ் அதிகாரிகள் அச்சுறுத்தி அவர்கள் முன்பு கொடுத்த வாக்குமூலம் பொய்யெனக் கூறிவைக்கவோ அல்லது ' தப்பியோட முயற்சித்ததாக' கூறி கொன்று போடவோ, அவர்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கும் வரை இவர்களிடம் C.I.D வாக்குமூலம் எடுப்பதற்கு அனுமதி வழங்க மாட்டேன் என்று சிறைச்சாலை கமிஷனர் காலியத்த அவர்களின் கூற்று இவைகளை நிரூபிக்கிறது.

இன்று செம்மணி புதைகுழிகள் தொடர்பாக விசாரணை ஆரம்பிக்கபடவில்லை.

அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கிக் கொண்டிருக்கும் எல்லா தமிழ் கட்சிகளும் PLOTE, TULF போன்றோர் தொடர்ந்தும் அரசாங்கத்தை வற்புறுத்திக் கொண்டிருக்கும் போது PLOTE அமைப்பின் மாணிக்கதாசன் கூறியிருப்பதாவது. அரசாங்கம் இதை தோண்டாவிட்டால் தாம் இதை தோண்டுவதாகவும் TULF கட்சியின் அ சிவசிதம்பரம் Amensty International அமைப்புக்கு இதை தெரிவித்திருப்பதாகவும் குறிப்பிட்ட ராணுவ அதிகாரிக்கு வழக்கு தாக்கல் செயயப் பொவதாகவும் கூறியுள்ளார்கள். இதேபோல் 1998 - 08 - 04ம் திகதி யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடிய

1. அன்னையர் முன்னணி
2. கிறிஸ்தவ ஒத்துழைப்பு இயக்கம்
3. இந்து இளைஞர் பேரவை
4. காணாமல் போனோர் பெற்றோர் சங்கம்.

போன்றோர் ஒன்று கூடி வெளியாரின் தலையீடின்றி இப்புதைகுழிகளை தோண்டுவதற்கு Amensty அமைப்பை அழைத்துக் கொள்ள வேண்டுமென தீர்மானித்துள்ளனர்

இந்த எல்லா அமைப்புகளும் செம்மணி புதைகுழிகளை அடிப்படையாக கொண்டு அரசாங்கத்துக்கு குற்றத்தை சுமத்தும் போது, யு.என்.பி செம்மணி புதைகுழிகள் தொடர்பாக அரசாங்கத்துக்கு, நாட்டு மக்களுக்கும் கூறியிருப்பதும் என்ன?

அரசாங்கத்தின் கொலைகான நடவடிக்கைகளை பற்றி மக்களுக்க புரியவைப்பதற்கு இவ்வளவு அரியதோர் சந்தர்ப்பம் தோன்றியுள்ள போதும் ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பாக எதையும் கூறாது செய்யாது இருப்பது ஏன்? (சிந்தியுங்கள்) செம்மணி புதைகுழிகள் தொடர்பாக கிடைக்கும் புதிய



7ம் பக்கம் பார்க்க.....

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



## சிங்கள பிரபகரன்...

5ம் பக்கத் தொடர்ச்சி

நெருக்கடியினால் தமிழ் மக்களின இதயங்களை புண்படுத்திய சம்பவங்கள் பல ஊடாக இன்றயை பலாபலன் கிட்டியுள்ளது. இவர்களது எழுச்சி 80 காலப்பகுதியில் உச்சக்கட்டத்தை அடைந்தது. இன்று இவர்கள் ஆயுதபாணிகளாக பயங்கரவாத இயக்கமாக தனிநாடு கோரும் அரசியலில் உச்ச நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர். முதலாளித்துவ முறையினால் இனி ஒருபோதும் நிவர்த்தி செய்ய முடியாத அளவுக்கு நாட்டை பாரியதோர் யுத்துத்துக்கு இழுத்துச் சென்று, நாளுக்கு நாள் பிணங்களை குவிக்கும் துரதிஷ்ட நாடாக அழிவை நோக்கிச் சென்றது. கடந்த காலத்தில் மனநிலையாக வளர்ந்துவந்த இனவாத மனநிலையினாலாகும்.

சிங்கள மக்களின் உணர்வுகளும் இதேபோலவே வயளர்ந்தோங்கியது. தமிழ் இன மக்களிடம் தமிழ் இனவாதம் வளர்ந்தோங்கியதுபோல், சிங்கள இன மக்களிடம் சிங்கள இனவாதம் கருத்தியல் ரீதியாக வளர்ந்தோங்கியது. ஆனால் வரலாற்றில் ஒருபோது சிங்கள இனவாதத்துக்கு இயக்கவியல் ரீதியான வடிவம் கிடைக்கவில்லை. குறிப்பாக மக்களின் எண்ணத்தில் இருந்தது சிங்கள இனவாதத்தை இன உணர்வுகளை வெளிக்கொண்வந்து, அவைகள் மூலம் பொருள் சேர்க்கும், உடமைகள், மக்களை அழிக்கும் செயற்பாடுகளுக்கான குறிக்கோளாக கொண்டு செயற்படுவதற்கான சக்தி அவர்கள் வசம் இருக்கவில்லை. பொருளாதார ரீதியில் பலத்தை கொடுப்பதற்கான சக்திவாய்ந்ததோர் அமைப்பு ரீதியில் இன உணர்வுகளுக்கு இருக்கவில்லை. எனவே இனிமேல் சிங்கள இன உணர்வு அகிம்சை ரீதியிலான ஒன்றல்ல. இப்போது அது இயக்கவியல் ரீதியில் வளர்ச்சி பெற்றுவிட்டது. அதற்கான பலத்தைக் கொடுப்பதற்காக இன்று இன உணர்வுகளுக்கு பின்னால் 'சிங்கள வீர விதஹன' இருக்கிறது. இப்போது சிங்கள இன உணர்வுகளுக்கு, வியாபாரிகள் ஊடாக பொருளாதார பலம் அதிகமாக உள்ளது. அனுருத்த ரத்வத்தையின் ஊடாக அதிகார பலத்தைப் போலவே ஆயுத பலமும் குறைவின்றி கிடைக்கின்றது. மாதுருவே சோபித தேரோவின் மூலம் மதசக்தியும் கிடைக்கிறது. நளின்த சில்வா, சம்பிக ரணவக, சரத்சாந்தி, ரவிந்திர போன்றோரின் தத்துவமும் பூமிபுத்திரவின் வடிவமும் 'சிங்கள வீர விதாஹன' வுக்கு கிடைத்துள்ளது. இவை அனைத்தையும் ஒன்று சேர்த்தவுடன் 'சிங்கள வீர விதஹன' தொடர்ந்தும் சிங்கள இன உணர்வுகளைக் கொண்ட அகிம்சை இயக்கமல்ல. உடைந்து விழும் முதலாளித்துவத்தினால் கதிகலங்க வைத்துள்ள சமூக மனநிலைக்கு வஞ்சகமான முறையில் மக்களின் இன உணர்வுகள் தூண்டி எதிர்காலத்தில் தொடர்ந்தும் மேலும் நாற்றுக்கணக்கில் கொல்லப்படும் மிலேட்சத்தனமான இனவாத யுத்தத்தை தூண்டிவிடுவதற்குப் போதுமான பாசிச அமைப்பாகவே 'சிங்கள வீர விதஹன' உருவெடுக்கின்றது.

### உலக வரலாற்று அனுபவம்

இதுபோன்ற இனவாத பாசிச வடிவிலான அமைப்பின் தோற்றமும் அவைகளின் இறுதியான செயற்பாடுகள் மனித பிணக் குவியல்களின் மூலம் முற்றுப்பெற்ற வரலாறு உலகவாழ் மக்களின் பல படிப்பினையாக உள்ளது. இத்தாலி பாசிசவாத இயக்கம், ஜெர்மன் நாசிகளின் முன்னணி, அமெரிக்க ஐக்கிய நாட்டில் - ஓரென்ஞ் - அமைப்பும், அவுஸ்திரேலியாவில் சுதேசிகளின் உணர்வுகளைத் தூண்டும் பழங்குடி அமைப்பும், இனவாத இயக்கங்களாகும். இலங்கையருக்கு மிக அண்மையிலும் அண்மைக் காலத்தில் அரசியல் ரீதியில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிய இந்தியாவின் 'சிவசேனா' சங்கம் . இன்று இந்தியாவில் ஆட்சி அதிகாரத்தில் இருப்பது இந்த இந்துவாத கட்சியாகும். வாஜ்பாய் இந்த இயக்கத்தின் இன்றைய இந்திய பிரதமராவார்.

'சிவசேனை' இந்தியாவில் ஆரம்பமாகியது 40 வருடங்களுக்கு முன்பாகும். தீவிர இந்து பக்தர்களைக் கொண்ட ஹிந்து இனவாத கருத்துக்களைக் கொண்டு நடைமுறையில் தீவிர குறிக்கோளாகக் கொண்ட அமைப்பு 'சிவசேனை' இந்தியாவில் இன்று இனவாத உணர்வுகளைத் தூண்டி இந்து மதத்தை அதிகாரத்துக்குக் கொண்டு வருவதற்கே சிவசேனை தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது. சிறியதோர் இயக்கமாக கிராமங்கள் தோறும் சென்று, மக்களின் இனவாத, மத உணர்வுகளைத் தூண்டி மக்களை அணிதிரட்டிய 'சிவசேனை' பின்பு உலக மக்களின் பார்வையை ஈர்த்தது. முஸ்லிம்களின் மசூதியை உடைத்து மத போராட்டமாகவே இவர்கள் தமது மிலேச்சத்தனமான போராட்டத்தை ஆரம்பித்தனர். அவ்வாறு தீவிர இந்து மதவாதிகளாகச் செயற்பட்ட 'சிவசேனை' இன்று இந்து மத கட்சியாக இந்தியாவில் அதிகாரத்திலிருக்கிறது.

இதுபோன்ற இனவாத அமைப்புக்கள் செயற்படுவது சர்வதேச உதவியுடனாகும். இலங்கையில் சிங்கள வீர விதாஹன உலக மக்களோடு தனது வியாபாரத்தைப் போலவே ஏனைய திட்டங்களையும் நடத்திச் செல்வது LUMA (Lanka United Merchant Associated) என்ற அமைப்பின் ஊடாகவே கொண்டு செல்கின்றது. உலக ரீதியில் பணத்தைப் போலவே ஏனைய உதவிகளும் இவைகள் ஊடாக சிங்கள வீர விதஹன வுக்கு வந்து குவிந்தவண்ணமிருக்கிறது. அதுமாத்திரமல்ல சிங்கள மக்களை அணிதிரட்டி உலகளவில் தனது இனவாத உணர்வுகளைத் தூண்டி செயற்பட பயன்படுத்துவது இன்று 'லூமா' என்ற சங்கக்கினூடாகவாகும்.

இவ்வாறு கிரிபத்கொடையில் ஒரு கடைக்கு குண்டுகளில் தாக்கி அழித்த சங்கமே அப்பாவி சிங்கள வியாபாரிகளுக்கு கைகொடுத்து உதவும் தமிழ் வியாபாரிகளை அடித்து விரட்டும் சிறியதோர் இயக்கமாக விஞ்ஞானத்திலும், கலைகளிலும், மதரீதியாகவும், பிற்போக்கு அறிவாளிகளின் சித்தாந்தத்தை வழங்கும் உயர் குடிகளின் அமைப்பாகவும் அனுருத்த ரத்வத்தையின் ராணுவ அதிகாரத்துக்கு ஆதரவளிக்கும் ரெடிகல் அமைப்பாகவும் இனவாத சிங்கள வீர விதஹன எனப்படுவோரை கணிப்பிட வேண்டியதல்ல. இனவாத சிங்கள வீரவிதஹன வைப்பற்றி புரிந்துகொள்ள வேண்டிய நல்லதோர் காரணியாதெனில், அது சிங்கள இனவாதத்தைப் போலவே தமிழ் இனவாதத்தையும் தூண்டிவிடுகின்றது. கொடூரமான கொலைக்களம் வரை விரிவடைந்து செல்லக்கூடிய அந்தத் தேவையும் இருக்கின்ற இனவாத இயக்கமாகவே நாம் கருதவேண்டியிருக்கின்றது.

## கூட்டு புதைகுழியும்...

3ம் பக்கத் தொடர்ச்சி

தகவல்களுக்கேற்ப அப்பிரதேசத்தில் மாலை 6.00 முதல் காலை 6.00 வரை ஊரடங்குசட்டத்தை பிறப்பித்து. ராணுவ மாத்திரம் அங்க இருப்பதால் புதைகுழிகளில் இருக்கின்ற எலும்புகூடுகளை தோண்டியெடுத்து வேறு ஓர் இடத்தில் புதைத்துவிட்டுள்ளதாகவும், இதனால்தான் C.I.D. விசாரணை பின்போடுவது இவ்வேளைகள் முடியுமாத்திரமொன்றும், அதன் பிறது C.I.D சென்ற விசாரணைகள் நடத்தி இங்கு ஏதுவிதமான புதைகுழிகள் இல்லையென்று கூறி குறிப்பிட்ட குற்றத்திலிருந்து தப்பிப்பதற்கான செயல்பாடுகளே மிகத்தெளிவாக தென்படுகிறது.

இது மாத்திரமல்ல

1. ஹோகந்தர கூட்டு புதைகுழிகளின் பிரதான குற்றவாளியான முன்னால் பிரதான பொலிஸ் அதிகாரி சுமித் எதிரிசிங்கவின் (இடை நிறுத்தப்பட்டிருந்த) தடையை நீக்கி இப்போது அவருக்கு A.S.P பதவியொன்று வழங்கப்பட்டிருப்பதோடு, அவரால் சாட்சியாளர்களை அச்சுறுத்தி விசாரணைக்கு ஆப்பு வைத்துள்ளார்!?

ரணிலுக்கு எதிராக பயன்படுத்தக்கூடிய பிரதான காரணியான ஹோகந்தர புதைகுழிகளை விசாரணைக்கு சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க செய்தது என்ன?

02. கடந்த 1987 - 90 ஆண்டுகால வன்முறைகளின் போது 1200 கொலைகளுக்கும், பாரியளவிலான கப்பம், கொள்ளைகளுக்கு பொறுப்பான 'ப்ரா கும்பலின்' யு.என்பியில் இன்று இருக்கும் பா.ம உறுப்பினர் 13 பேருக்கும் உயர் பொலிஸ் அதிகாரிகள் 18 பேருக்கும் (S.S.P - 1 பிரதான பொலிஸ், A.S.P - 2 அதிகாரிகள் - 15)

எதிராக ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகள் இடையில் நிறுத்தப்பட்டுள்ளதோடு இதில் சில பொலிஸ் அதிகாரிகளுக்கு உயர்பதவியம், சிலருக்கு வெளிநாட்டு பயிற்சிகளுக்கு அனுப்பிவைக்கபட்டுள்ளனர்.

சந்திரிகா ரணிலை எதிர்பதென்றால் 'ப்ரா' குழுவின் கொலைகளை மூடிமறைப்பதற்கு முயற்சிப்பது ஏன்?

03. திவுலபிட்டிய வல்விட புதைகுழிகளில் கொள்ளப்பட்ட 31 பேரின் கொலைக்கு பொறுப்பானவனை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் மேல் மாகாண பிரதான அமைப்பாளர் அரியரத்தன ஜனாதிபதியும் A.S.P பதவி கொடுத்திருக்கும் எதிராக பெருமளவிலான சாட்சிகள் இருந்தும் இக்கொலைஞர்களை சுதந்திரமாக நடமாடவிட்டுவிட்டு விசாரணையை இடைநிறுத்தி இருப்பது ஏன்.?

இலங்கையில் எல்லா கொலைகாரர்களின் அன்புக்குரிய பாத்திரமான பேமதாஸ உருகம்பல ஸ்ரீ.ல.சு.க அங்கத்தவர்கள் உட்பட நூற்றக்கணக்கானோரை கொன்று குவித்த கொலைகாரனுக்கு, ஓய்வூதிய சம்பளம் வழங்கி ஏதுவிதமான விசாரணையின்றி சுதந்திரமாக நடமாட விட்டிருப்பது ஏன்?

யு.என்.பிக்கும் பொதுசன முன்னணிக்கும் சொந்தமான புதைகுழிகள் சமூகத்தை இருளடையச் செய்த மிலேச்சதனமான சம்பவங்களைப்பற்றிய விசாரணை இருசாரரின் ஒத்துழைப்போடும் கைவிடப்பட்டுள்ளதும். அவைகளுக்கு பொறுப்பான கொடிய மிலேச்ச கொலைகாரர்களுக்கு தண்டனை வழங்காது பதவி உயர்வும், தமது கட்சிக்குள் உயர் பதவிகளையும் வழங்கிய இன்னும் பல சம்பவங்களை முன்வைக்க முடியும். ஆயினும் அந்த எல்லா சம்பவங்களையும் ஓர் பொதுவான முடிவுக்கு வரும் போது

புதைகுழிகள் - யு.என்பி என்றால் , பொதுசனமுன்னனி மௌனம்.

புதைகுழிகள் - பொ.முன்னணியின் என்றால் , யு.என. பி மௌனம்.

இவையணைத்தில் ஒன்றாகத் தெரிய வருவதாவது சந்திரிகாவும் ரணிலும் அவர்களிடம் இருக்கின்ற நட்பை மூடி மறைத்து நாட்டு மக்களை மூடர்களாக நினைத்து மந்தைகளென மாற்றுவதற்காக இவர்களின் செயல்பாடுகள் தெளிவாகின்றன. தேர்தலை பின் போடடதிலும், ஜனநாயகத்தை புதைப்பதிலும் (அவசரகாலசட்டம் பகிடிவதைச்சட்டம்) மக்கள் சக்திகளை அடக்குமுறைச் செய்வதிலும், நாட்டின் வளங்கள் பல்தேசிய கம்பனிகளுக்க விற்பதிலும், போன்ற முக்கியமான பிரச்சினைகளின் போலவே இந்த கூட்டு புதைகுழிகள் பற்றிய 'பிரச்சினைகளில் இவர்களது கூட்டும், அந்தரங்க கூட்டுச் செயல்பாடுகளும் இந்த கூட்டு புதைகுழிகள் சம்பவம் நிரூபிக்கின்றது. மேலும் இவைகளை நரூபிக்க அளவுக்கதிகமான சாட்சிகள் உள்ளன.

இறுதியாக நாம் உங்களுக்கு சிக்கலான கேள்வியை முன்வைப்பதற்க தீர்மானித்தோம்.

இந்த இருவரில் பெரிய வஞ்சகர், மிகப்பெரிய கொலைகாரன் யார்?

## ஹேமா களத்தில்...

1ம் பக்கத்தொடர்....

அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.கடந்த 14ம் திகதி ஐ.தே.க வினால் தேர்தலை பின்போட்டதற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட எழுச்சி இயக்க பிரச்சார நடவடிக்கைக்கு சமமான அளவு ஹேமா பிரேமதாசவும் அன்றயதினம் அவரது படத்தைகொண்ட பெருமளவிலான போஸ்டர்களை அதில் "ரணிலுக்கு முதுகெலும்பில்லை" என்ற குற்றத்தை அடிப்படையாக வைத்து, ஐ.தே.க. விற்கு உறுதியான தலமைத்துவத்தை உருவாக்குவதாக கூறிக்கொண்டு, இக்கட்சி நடவடிக்கைகளில் ஈடுவடுவதாக தெரியவருகிறது. அதேவேளை, இந்த நிலமைகளுக்கு முகம் கொடுப்பதற்காக ரணில் சார்பு கும்பல் இப்போது குழம்பிபோயிருப்பதாகவும் தெரியவருகிறது. 1987 - 1990 கால பகுதியில் எச். ஆர் பியசிரியால் செய்யப்பட்ட கொடுர செயல்பாடு ஆதாரங்களை கொண்டு தமக்கு சார்பான ஊடகங்கள் மூலம் ரணில்வாதிகள் வெளியிடப் போவதாகவும் தெரியவருகிறது. ஜனாதிபதி மாளிகையில் கலவாடப்பட்ட பொருட்கள் பற்றிய தகவல்களை ஊடகங்களுக்கு தெரிவித்தது ரணில் வாதிகளால் தான் எனக் கூறப்படுகிறது. பிரேமதாசவாதிகள் தனியாக செயல்படுவதும் ஜனாதிபதி தேர்தலுக்கு வேட்பாளர் ஒருவரை நியமிப்பதும் ஐ.தே.க.யின் நெருக்கடி மேலும் உக்கிரமடையுமென அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

## பொதுவேட்பாளர்

1ம் பக்கத் தொடர்....

ஒருவரை நிறுத்த வேண்டுமென நாம் கருதுகின்றோம்.

இவ்வேளைகிட்டம் தொடர்பாக 'செஞ்சக்தி' க்கு மேலும் தோழர் டில்வின் சில்லாவிடம் வினவியபோது அவர் கூறியதாவது,

பொதுசன முன்னணி ஆட்சியார்கள் ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்கு செல்வதற்காக முடிவு செய்யாதிருப்பது அத்தேர்தல் தமக்கு சாதகமான வெற்றிகளை பெற்றுக்கொடுக்தம் எனக் கருதுவதனாலேயே, அவ்வாறு எந்தவொரு சாதகமான தன்மைக்ள் இருந்தாலும் கூட அந்த முடிவை மாற்றக்கூடிய நடவடிக்கையே, தமது இந்த முடிவு என்று அவர் வலியுறுத்திக் கூறினார்.

இந்த நடவடிக்கையினால் ஐக்கிய தேசிய கட்சியும் பாரியதோர் நெருக்கடிக்கு உள்ளாவதும் தவிர்க்க முடியாதென அவர் கூறினார்

ஐக்கிய தேசிய கட்சி இப்போது களிப்படைந்திருப்பது, சந்திரிகாவின் ஆட்சியின் போது வெறுப்படைந்தோர் தமது கட்சியை சூழ அணிதிரண்டிருக்கிறதென்றும், அவ்வாறான ஐக்கிய தேசிய கட்சியின் கணிப்பீடை முற்றாகவே மாற்றக்கூடிய வேளைதிட்டமே இதுவாகுமென்று ம.வி.மு. பொதுச் செயலாளர் தோழர் டில்வின் சில்வா தொடர்ந்து கூறினார். அதேபோல் குறிப்பாக குறிப்பிட்ட சில காரணங்களின்போது ஐக்கியமாக முகம் கொடுப்பது மக்களுக்கு பெற்று கொடுக்க கூடிய வெற்றிகள் தொடர்பாக இம்முடிவுகள் மாற்றிக் கொள்ள முடியுமென்பதும் அவா வலியுறித்தினார்

எப்படியாயினும் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு முடிவு செய்திருக்கும் இந்த நடவடிக்கையை நடைமுளைறப்படுத்துவதில் வெற்றி கண்டால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்கும் மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்திசெய்ய முடியுமென எம்மொடு பேசிய பல வெகுஜன அமைப்பு தலைவர்கள் கூறினார். தனிப்பட்டரீதியில் தமது உருவத்தை உயர்த்துவதற்கோ தமது, கட்சியை முன்னோக்கி, நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு ஆதரவு எதிர்ப்பு என்ற சர்வஜனவாக்கெடுப்பாக மாற்றுவதற்கும், அப்போராட்டத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு எதிரான கருத்தை வெற்றியை நோக்கி உயத்துவதற்கும் இருக்கின்ற ஒரே ஒரு நடவடிக்கை இதுவாகுமென பெரும்பாலோரின் கருத்தாகும்..

எதிர்வரும் சில வாரங்களில், குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் இது தொடர்பாக தமது கருத்துகளை எங்களிடம் தெரிப்பார்கள் என்று கூறிய பொதுச் செயல்ாளர் தோழர் டில்வின் சில்வா அவர்கள், அவர்களின் முடிவுகளிலிருந்து இந்த நடவடிக்கையில் இரண்டாம் கட்ட செயல்பாடுகளுக்கு செல்வோம் என்றும் அவர் வலியுறுத்திக் கூறினார்.

படிப்பகம்

www.padippakam.com

செஞ்சக்தி

☆ ARUNODAYA, B.P. 485, 75528 PARIS, CEDEX 11, FRANCE,
FAX: 0033 1 40330414
☆ P.O. BOX 194, CARNEGIE, VICTORIA 3163, AUSTRALIA,
FAX: 0061 3 94369312
☆ E-MAIL-JVP @ i bekkoame.or.jp

"முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட்டம், உள்ளடக்கத்தில் இல்லையேனும் எப்படியும் வடிவத்தில், ஆரம்பத்தில் தேசிய போராட்டமாகவே இருக்கின்றது. ஒவ்வொரு நாட்டின் பாட்டாளி வர்க்கமும் தனது நாட்டு முதலாளித்துவ வர்க்கத்துடன் தான் முதலில் கணக்குத் தீர்த்துக் கொள்ள வேண்டியிருக்கின்றது."

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

## பின்போடப்பட்ட தேர்தலின் முன்னால் ஐ.தே.க. யின் மீள் வருகையும்

அதிவிஷேட வர்த்தகமாணி அறிக்கையின் மூலம் பொதுசன முன்னணி அரசாங்கம் மாகாணசபைத் தேர்தலை தள்ளிப் போட்டனர்.

ஆகஸ்ட் மாதம் 28ம் திகதி நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளரினால் முடிவு செய்யப்பட்டிருந்த மாகாணசபைத் தேர்தல் காலவரையரையின்றி பின்போடப்பட்டிருக்கிறது.

தேர்தலை பின்போடப்பட்ட காரணத்துக்கு பொறுப்பேற்க வேண்டிய எதிர்கட்சியான ஐ.தே.க இப்போது பாரிய குழப்பமடைந்துள்ளது.

அதன் இளைஞர் அமைப்பின் ஊடாகவும் பொதுவாக ஐ.தே.க யும் சேர்ந்து பாரிய (போலியான ) ஆர்பாட்டமொன்றுக்கு தயாராகிக் கொண்டிருக்கின்றனர்.

அதிகாரத்திலிருக்கும் அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமைக்கு முட்டுகட்டை இட்டு செயல்படும்போது அதை எதிர்ப்பதும் அவ்வாறான ஜனநாயக விரோத செயல்பாட்டை பின்நோக்கி தள்ளுவதற்காக செயல்படவேண்டியது எதிர்கட்சியான ஐ.தே.க யின் பிரதான கடமையாகும்.

அவ்வாறு தர்கிக்கும் போது ஐ.தே.க யின் இந்த விழிப்பு ஜனநாயகத்துக்காக ஐ.தே.கயின் இருக்கின்ற தியாக செயல்பாட்டை படம் பிடித்து காண்பிக்கும் கண்ணாடியாகும்., மாகாண சபைத் தேர்தல் தள்ளிக்போடப்பட்டிருக்கிறது.

இது மிகவும் தெளிவாக தென்படுகின்ற காரணியைபோல் பொதுசன முன்னணி அரசாங்கம் ஜனநாயத்துக்கு எதிராக எடுக்கப்பட்ட நயவஞ்சக செயல்பாடுமாகும்.

இவ்வாறான மக்கள் விரோத செயல்பாட்டுக்கு எதிர்ப்பை தெரிவிப்பதற்காக ஐ.தே.க யால் காண்பிக்கபடும் செயல் வஞ்சக போலிமிக்க மோசடி மிக்க ஏமாற்று செயல்பாடுகளாகும்.

ஐக்கிய தேசிய கட்சிக்கு மாகாணசபைத் தேர்தலை தள்ளிப் போட்டபிறகே இது தொடர்பாக ஞாபகம் வந்திருக்கிறது.

குதிரை திசைமாறி ஓடிய பிறகு ஐ.தே.ச உட்பட ரணிலும் குதிரை சம்பந்தமாக குழப்பமடைந்துள்ளனர்.

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) இன்னும் பல சட்சிகளும் ஊடகங்கள் உட்பட பலரும் அரசாங்கத்தின் இந்த மிலேச்சதனமான காவாலி நாடகத்தை அம்பலப்படுத்தியது. இந்த தீர்மானத்துக்க அரசாங்கம் ஆரம்பிக்கும் போதேயாகும்.

அவ்வேளையில் எதிர்கட்சித் தலைவர் ரணில் சந்திரிகாவின் சேலைக்குள் மறைத்துக் கொண்டு போலி ஜனாதிபதி தேர்தலொன்றை கேட்டு, அரசாங்கத்தின் இந்த மக்கள் துரோக நடவடிக்கைக்கு ஆதரவாக அரசாங்கத்தின் பிரதிநிதியாக செயல்பட்டுக் கொண்டிருந்தார்.

அந்நிலைமையை தமது அணிக்கு சாதகமாக்கி கொண்ட அரசாங்கம் தேர்தல் பின்போடப்படுவதற்கு எதிரான மக்களின் எதிர்ப்பை பின்தள்ளிவிட்டு, வர்த்தமாணி அறிக்கையின் மூலம் மாகாணசபைத் தேர்தலை தள்ளிப் போட்டனர்.

உண்மையாகவே தமக்கு முகம் கொடுக்க முடியாத தேர்தல் முன் பாரிய பின்னடைவுக்குள்ளாகியிருந்த அரசாங்கம் யுத்தத்துக்கு மறைத்துக்கொண்டு தேர்தலை பின்போடுவதற்காக சகலவிதமான சூழ்ச்சிகளையும் செய்து கொண்டிருந்த வேளையில், ஐ.தே.கயும் தமது கால் நகர்த்தலை அரசாங்கத்துக்க சாதகமாகவே நகர்த்திக் கொண்டிருந்தனர்.

நேரடியான விரிவான மக்கள் எதிர்ப்பை காட்டி பின்போடப்படும் தேர்தலை உடனடியாக நடத்தும்படி கேட்பதற்கு பதில் ஐ.தே.க தமது இயலாமையை மூடி மறைத்து அரசாங்கத்துக்கு முண்டு கொடுக்கும் அரசியலை தேர்தெடுத்திருந்தனர்.

எனவே நெருக்கடிக்கு இரையாகியிருப்பது பொதுசன முன்னணி அரசாங்கம் மாத்திரமல்ல. அதே காரணி ஐ.தே.க யை நோக்கியும் நகர்ந்திருக்கிறது.

அதாவது தமது உட்கட்சி அதிகார போட்டியை மக்களிடம் மூடிமறைக்க முடியாமையினால் பொதுசன முன்னணி அரசாங்கம் முகம் நெருக்கடியை போலவே ஐ.தே.க யும் நெருக்கடியில் மூழ்கியுள்ளது.

தேர்தலை ஒத்திப்போட்டது ஐ.தே.க ரணிலுக்கு பாரிய ஆசீர்வாதம் இருப்பது இதனலேயாகும். நேரடியான மக்கள் ஆதரவைக் கொண்டுள்ள எதிர்கட்சியினால் பின்போடப்பட்ட தேர்தலை வெற்றிக் கொண்டு தங்களது திறமையை மக்களிடம் வெளிப்படுத்துவது இலகுவான காரியமானலும், ஐ.தே.க முடியாமையின் முன்னால் அரசாங்கம் அமிழ்ந்து போனது போலவே ஐ.தே.க யும் எழமுடியாத செருக்கடியில் மூழ்கியுள்ளது.

ஆயினும் அது அப்படியல்ல என்பதை காட்டுவதற்காக ஐ.தே.க இப்போது அவசர அவசரமாக கதியற்ற கண்காட்சியை காட்டுவதற்கு ஆரம்பத்திருப்பதாக தெரிகிறது.

(தாம் தேர்தலை பின்போட்டமையை எதிர்ப்பதாகவும், அதற்கான இயங்குவியல் ரீதியில் போராடுவதாகவும், இந்நாட்டு ஜனநாயகத்துக்காக தியாக மனப்பாண்மையோடு செயல்படுவதை காண்பிக்க அவர் இவ்வாறான போலியான போராட்டத்துக்கு தயாராகின்றனர்.

ஆனால் ஐ.தே.க. யின் முடியாமையை இந்த விளையாட்டின் மூலம் அம்பலப்படுத்த போவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். இவர்களால் மக்கள் மத்தியல் உறுதியான அத்திவாரத்தை இடுவதற்கு ஒரு போதும் முடியாத காரணியாகும்.

வெற்றி கொள்ள முடியாத ஜனாதிபதி தேர்தலுக்காக குழப்பமடைவதும், தேர்தலை பின்போடப்பட்ட பிறகு வெளிக்காட்டப்படும் குழப்பமும் இரண்டு தந்திரோபாயமல்ல. இது மக்களை ஏமாற்றும் நரியின் தந்திரமாகும்.

## 'சிங்கள வீர விதஹன !' அமைச்சர் ரத்வத்தையின் முன்னணி

இன வெறியோடு செயல்படும் 'சிங்கள வீர விதாஹன' என்ற அமைப்பு, பிரதமர் பதவிக்கும், அதற்கு மேலுமுல்ல அதிகாரத்துக்குமாக வாயைப்பிளைத்துக் கொண்டிருக்கும் அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தனது பிரதி பிம்பத்தை உப்ப வைத்துக் கொண்டு அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவரால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பா என்ற சந்தேகம் வளர்ந்து வருகிறது. சிங்கள வீரவிதஹன' அமைப்பின் மூலம் நடத்தப்பட்ட சில சம்பவங்களும், அவற்றுக்குக் கிடைத்த அரச பாதுகாப்பும் இப்படியான சந்தேகங்களைத் தோற்றுவிப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நாட்டின் பல வியாபார நகரங்களைக் கேந்திரப்படுத்திச் செயல்படும் இந்த ' சிங்கள வீர விதாஹன' அந்தந்தப் பகுதிகளில் இருக்கும் மிகவும் பணம் படைத்த சிங்கள முதலாளிகளை சம்பந்தப்பட்ட பகுதிகளில்' தமது அமைப்பாளர்களாக வைத்துக்கொண்டுள்ளனர்.

நகரங்களில் வியாபாரஞ் செய்யும் தமிழ், முஸ்லிம், வியாபாரிகளையும் பார்க்க முன்னேறுவதற்கு தூண்டப்பட்டு, வியாபாரப் போட்டியொன்றை நிர்மானித்து அவரவர்கள் சொல்லப்பட்டுக் கொள்ளும் நிலையை ஏற்படுத்துவதே இந்த 'வீர விதான' வின் நோக்கமாகும்.

கோட்டையில் மொத்த வியாபாரம் செய்யும் தமிழ், முஸ்லிம் வியாபாரிகளின் ஸ்திரத்தை சிதைப்பதற்காக, சிங்கள வியாபாரிகள் சிலருக்கு அடிப்படை உதவிகளை இந்த 'வீர விதாஹன' அமைப்பு செய்து கொடுத்துள்ளது. அதோடு, சிங்கள சிறு வியாபாரிகளுக்கு பலவிதங்களில் கடனுதவி செய்து தமிழ் முஸ்லிம் வியாபாரிகளுக் கெதிராக ஆத்திரமூட்டல் செய்துள்ள சம்பவங்களும் நடந்துள்ளன. அதுமாத்திரமல்ல, சிங்கள வியாபாரிகளை மாத்திரம் கொண்ட நகரங்களை உருவாக்குவதற்காக

ஆயுதத்தாக்குதல் நடத்துமாவுக்கு இந்த இனவாத விதஹன முன்னேறியுள்ளது.

கிரிபத்கொட நகரத்தில் வியாபாரமொன்றை ஆரம்பிப்பதற்காக செயல்பட்ட முஸ்லிம் வியாபாரியொருவர் இந்த இனவாத 'விதஹன' முக்கியஸ்த்தர்களால் வியாபாரம் ஆரம்பிக்கப்படக் கூடாது என எச்சரிக்கை செய்யப்பட்டார். இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாது வியாபாரத்தை ஆரம்பிக்க முயற்சி செய்தால் அந்த வியாபார ஸ்தலத்தை தாக்குமளவுக்கு இந்த 'வீரவிதான' இயக்கம் முன்னேறியுள்ளது. முஸ்லிம் வியாபாரியால் புதிதாக ஆரம்பிக்கப்பட அந்த ஸ்தலத்து ஆயுதபாணிகளாக வந்த பல நபர்களால் சுடப்பட்டு, தாக்கப்பட்டு அந்த வியாபாரஸ்தலம் சேதப்படுத்தப்பட்டுள்ளது. இது சம்பந்த அந்த முஸ்லிம் வியாபாரி போலிஸில் முறைப்பாடு செய்தபோதும் எவ்வித விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிகிறது.

கிரிபத் கொட நகரத்தில் சிங்களவர்களைத் தவிர்ந்த வேறு இனத்தவர்கள் எவருக்கேனும் வியாபாரம் செய்ய இந்த இனவாத வீர விதான இயக்கம் இடமளிக்காத தோடு, குறைந்த பட்சம் வியாபாரம் பெயர்களைத் தமிழில் எழுதக்கூட அனுமதிப்பதில்லை.

மேற்குறிப்பிட்ட இந்த வீரவிதான இயக்கத்தில் லக்கீ அல்கம, சிசில் வைத்யரத்தன போன்ற இருந்த ராணுவ அதிகாரிகள் பலர் செயல்பட்டு கொண்டிருக்கின்றனர். இதனால் அந்நிய வியாபாரிகளுக் கெதிரான வன்முறைகளைக் கையாளக்கூடிய நிலைமை இருப்பதாக இதைப்பற்றிய ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்த 'வீரவிதாஹன' அமைப்பில் முழுநேர அங்கத்தவர் ஒருவருக்கு ரூபா 8,000/= மாத வேதனமாக கொடுப்பதோடு, அதில் அங்கத்தினராகச் சேர விரும்புவோர் ரூபா 5 லட்சம் வைப்புப்பணமாகச் செலுத்த வேண்டுமெனவும் கூறப்படுகிறது. வர்த்தக உலகில் பலவிதமான வியாபாரங்களால் சம்பாதித்து பலம் வாய்ந்த நிலையிலுள்ள பல சிங்கள வியாபாரிகள் ஏற்கனவே இதில் அங்கத்துவத்தைப் பெற்றுள்ளதோடு வியாபாரம் என்ற போர்வையில் அனவாத மோதலொன்றை ஏற்படுத்தி அதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தமது இனவாத நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதே இவர்களது நோக்கமாகம் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இதற்கிடையில் பிரதமர் பதவிக்காக வாய்பிளந்து கொண்டிருக்கும் அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தான் தான் பிரதமர் பதவிக்கு லாயக்கானவர் என்பதைக் கூற இந்த வீர விதாஹன' இலக்கத்தோடு தொடர்புடைய சக்திகளைப் பயன்படுத்திக் கொண்டிருப்பதும் தெளிவாக்கிறது. சமீபத்தில் நடந்த ரத்வத்தை அமைச்சரின் பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்ட மாதுலுவே சோபித்த தேரர் அமைச்சர் ரத்வத்தை நவீன துட்டகைமுனு என்று நாமஞ்சூட்டியது கூட இந்தத் தொடர்பின் பிரதிபலன் தான் என்பதும் ஆய்வாளர்களின் கருத்துமாகும். அத்தோடு பிரதமர் பதவிகளுக்கு தகுதியானவர் ரத்வத்த தான் என்று ஒரு மகாநாயகதேரர் பகிரங்கமாகக் கூறியதும் கவனிக்கத்தக்கது. சிங்கள வீர விதாஹனவுடன் சம்பந்தப்பட்ட பல வியாபாரிகளும், பிக்குகளதும் அமைச்சர் ரத்வத்தவை பிரதமாக்குவதற்கு முயற்சி செய்து கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது. ராணுவத்தைச் சேர்ந்த ஒரு சில உயரதிகாரிகளும் வீரவிதாஹன அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக தெரிகிறது அவர்களது இலக்குகூட ரத்வத்த அமைச்சரை பிரதமராகமாத்திரமல்ல அவரை ஜனாதிபதியாக்குவதற்கு தான் என்று கூறப்படுகிறது. அனுருத்த ரத்வத்த மலையகத்தை சேர்ந்த சிங்கள பிரபுக்கள் குடும்பத்தை சார்ந்தவர் என்பதும் இந்த தொடர்புகள் அதிகரிக்கப்படுவதற்கு காரணம் என்றும் கூடப்படுகிறது செயல்பட்டு தேசிய சிந்தனையாளர் அமைப்பும், 'ஜனத்தா மிதுரோ' அமைப்பைச் சேர்ந்த சிலரும் ' இந்த வீரவிதான' அமைப்பில் தலைமையேற்று செயல்பட்டு இருப்பதோடு, தற்போது முக்கிய அமைச்சர்கள் சிலரின் செயலாளர்களாக இருக்கும் சிலரும் மேற்படி இனவாத 'வீரவிதாஹனவோடு சம்பந்தப்பட்டு இருக்கும் சிலரின் இரகசியமான அதன்நடைவடிக்கைகளில் ஈடுபட்டு இருப்பதாகவும் தெரிகிறது.

## ஜே. வி.பி.யின் இன்னுமோர் புதிய வேலை!



மக்கள் விடுதலை முன்னணி உள்ளூராட்சி உறுப்பினர் நிதிபாலும், பிரதேசவாசிகளின் ஒத்துழைப்போடும் அண்மையில் கட்டிமுடிக்கப்பட்ட "தாய் சேய் நலன் பராமரிப்பு நிலைய' த்தின் திறப்பு விழாவில் பிரதான அதிதியாக கலந்துகொண்டவர் ம.வி.மு பிரச்சார செயலாளர் தோழர் விமல் வீரவங்ச,பெருந்திரளான மதகுருமார்களும் கலந்துகொண்டனர். 10 கிராமங்களுக்கு சேவை செய்யக்கூடிய தாய் சேய் நலன் பராமரிப்பு நிலையமொன்றின் தேவை பாரயதோர் குறைபாடாகவே நிலவியது. ஏனைய அரசியல் கட்சிகள் இதை செய்துதருவதாக பலதடவைகள் வாக்குறுதி அளித்தபோதும், அவ்வாக்குறுதி தேர்தல் காலத்தில் காற்றில் பறந்தவையாகும். இறுதியாக மக்கள் விடுதலை முன்னணியின் பி-சபை உறுப்பினர் (ஹொரண)பியசிரி விஜேநாயக அவர்களே இதற்கான முழு முயற்சிகளையும் மேற்கொண்டு பாரய தியாகங்கள் செய்தும்,களுத்துறை மாவட்ட கமிட்டி (ம.வி.மு) கட்சி மேலிடத்தோடு ஆலோசித்து 10 கிராமங்களின் தேவையை நிவர்த்திசெய்யக்கூடிய இந்த 'தாய்,சேய் நலன் பராமரிப்பு நிலைய"பென்னான கட்டிடத்தை தாங்களது சம்பளத்தின் மூலம் ஏமக்கு தியாகம் செய்துள்ளனர். என்று அக்கூட்டத்தில் பேசிய ஆசிரியர் ஒருவர் கூறினார்.

படிப்பகம்

கொழும்பு 10 பஞ்சிகாவத்தை வீதி, இல:198-19ல் வசிக்கும் ... இல:72-2 ... வீதி ... அச்சிட்டு வெளியிடப்பட்டது.